**அல்லாஹ்வின் கட்டளை**

وَمَنۡ يَّعۡمَلۡ سُوۡٓءًا اَوۡ يَظۡلِمۡ نَفۡسَهٗ ثُمَّ يَسۡتَغۡفِرِ اللّٰهَ يَجِدِ اللّٰهَ غَفُوۡرًا رَّحِيۡمًا

(அந்நிஸா : 111)

மேலும் ஒருவர் தீமை செய்யவோ, தமக்குத் தாமே தீங்கிழைக்கவோ செய்த பின்னர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பைக் கோரினால், அவர் அல்லாஹ்வை மிக்க மன்னிப்போனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகக் காண்பார்.

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ     نَحۡمَدُهٗ وَنُصَلِّيۡ عَلٰى رَسُوۡلِهِ الۡكَرِيۡمِ     وَعَلٰى عَبۡدِهِ الۡمَسِيۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

தொகுதி 5

இதழ் 45

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

18 ரபீவுல் அவ்வல் 1442 ஹிஜ்ரி கமரி ★ 5 நுபுவ்வத் 1399 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி ★ 5 நவம்பர் 2020


**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**எனக்கு வியப்பு ஏற்டுகிறது. மனிதன் தன்னைப் போன்ற மக்களைப் புகழ்ந்துரைக்கிறான்; ஆனால் இறைவனைப் புகழ்ந்துரைப்பதில்லை என்பது வருத்தத்திற்குரியதாகும்.**

**துஆவுக்கு சீக்கிரம் பதில் கிடைத்து விட்டால் பொதுவாக அது நன்றாக இருப்பதில்லை. [இறை தண்டனை] காலம் தாழ்ந்து வருவது வெற்றிக்குக் காரணமாக அமைகிறது.**

**கனவுகளின் விளக்க நூலில் செல்வம் ஈரல் ஆகும். எனவே தான தருமங்கள் செய்து உயிரைக் கொடுப்பது ஆகும்.**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...**

## இறைவனின் தன்மைகள் மாறுவதும் அருள் ஆகும்

இறைவனின் தன்மைகள் மாறுவதும் அருள் ஆகும். பாருங்கள்! யூனுஸ் (அலை) அவர்களின் சமுதாயத்தின் விவகாரத்தில் (இறை தண்டனை பற்றிய) உறுதியான இறை அறிவிப்பை வழங்கி மக்கள் அழுது புலம்ப ஆரம்பித்தபோது தண்டனையை ஒத்திப் போட்டான். மேலும் கருணையுடன் அவர்களைப் பார்த்தான். எனவே இறைவனின் மாறும் தன்மையிலும் ஒரு சிறப்பான அருள் இருக்கிறது. ஆனால் எவர்கள் அவனுக்கு முன்னால் அழுகிறார்களோ, தன்னடக்கத்தை வெளிப்படுத்துகிறார்களோ அவர்களே அந்த அருளில் இருந்து பலன் பெறுபவர்களாவர். மக்கள் தன்னைப் போன்ற மனிதனைப் புகழ்கின்றான். ஆனால் இறைவனைப் புகழ்வதில்லை என்பது வேதனைக்குரியதாகும்.

## துஆ ஒப்புக் கொள்ளப்படுவதில் பொறுமை, வெற்றிக்குக் காரணமாக இருக்கிறது.

துஆவுக்கு சீக்கிரம் பதில் கிடைத்து விட்டால் பொதுவாக அது நல்லதாக இருப்பதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே துஆ செய்யும்போது அவநம்பிக்கை இருக்கக் கூடாது. துஆவில் எந்த அளவுக்கு காலதாமதம் ஏற்படுகிறதோ, வெளிப்படையில் எந்த பதிலும் வருவதில்லையோ அதற்கு மகிழ்ச்சியடைந்து நன்றி சஜ்தாவில் வீழ்ந்து விடுங்கள். ஏனெனில் அதில் சிறப்பும் நன்மையும் இருக்கிறது. (தண்டனை இறங்குவதில்) காலதாமதம் வெற்றிக்குக் காரணமாகும்.

## யூனுஸ் (அலை) அவர்களின் சமுதாயத்திலிருந்து இறை தண்டனை ஒத்திப் போட்டதன் காரணம்

துஆ வெற்றிக்கு மிகப்பெரும் கேடயமாகும். யூனுஸ் சமுதாயம் மன்றாடுதல் மற்றும் துஆவினால், வரக்கூடிய தண்டனையிலிருந்து தப்பித்து விட்டது. நான் புரிந்தவரை அன்பை வெளிக்காட்டுதல், கோபத்தைக் காட்டுவதற்குக் கூறப்படும். மேலும் 'ஹூர்' (என்ற அரபிச் சொல்) மீனுக்கும், 'நூன்' (என்ற அரபிச் சொல்) கூர்மையானது என்பதற்கும் கூறப்படும்; மேலும் மீனுக்கும் கூறப்படும். எனவே ஹஸ்ரத் யூனுஸ் (அலை) அவர்களின் அந்த நிலை ஒரு கோபத்தின் நிலையாக இருந்தது.

உண்மை என்னவெனில், முன்னறிவிப்புகள், துஆக்கள் வெறுமனே வீணாய்ப் போய் விட்டன; எனது விஷயம் முழுமை அடையவில்லை என அவர் நினைத்தார். இதிலிருந்து ஒரு படிப்பினை கிடைக்கிறது. அதாவது, நியதியை அல்லாஹ் மாற்றி விடுகிறான். அழுவதும் மன்றாடுவதும், தான தருமங்கள் செய்வதும் குற்றங்களை ஒன்றுமற்றவையாக்கி விடுகின்றன. தான தருமங்கள் பற்றிய கொள்கையும் இதிலிருந்தே தோன்றியது. இந்த வழிமுறை அல்லாஹ்வை திருப்திப்படுத்துவற்காக ஆகும். கனவுகளின் விளக்கவுரை நூலில் செல்வம் ஈரலுக்குக் கூறப்படும். எனவே தருமம் செய்வது உயிரைக் கொடுப்பதாகும். மனிதன் தான தருமங்கள் செய்யும்போது எந்த அளவுக்கு உண்மையையும் உறுதித் தன்மையையும் காட்டுகிறான்! உண்மை என்னவென்றால், செயல் வடிவில் கொண்டு வந்து ஒரு விஷயத்தைக் காட்டாதவரை பேசுவதால் ஒன்றும் ஆகி விடப்போவதில்லை. உண்மையாளர்களுக்கு அடையாளம் காட்டுவது என்பதால்தான் அதற்கு சதகா (உண்மையானது) என்று கூறுகிறோம்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 218–219 காதியான் பதிப்பு (2018)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

நான் உங்களைப் பற்றி நீங்கள் தேவையுடையவர்களாகி விடுவீர்களோ என அஞ்சவில்லை; மாறாக உலகம் உங்களை சொகுசுக்காளாக்கி விடக் கூடாதே என அஞ்சுகிறேன். பிறகு நீங்கள் முந்திக் கொண்டு பேராசை கொண்டு விடக் கூடாதே என அஞ்சுகிறேன். (நபிமொழி)

ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தப்லீகினால் முஸ்லிம்கள் தாருல் அஃகம் என்ற புகலிடத்தில் பாதுகாப்பு பெறுவதற்கு முன்பே ஒன்பதாவது நபராக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

ஹிஜ்ரி 10 –ஆம் ஆண்டு ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஹஜ்ஜத்துல் விதா சந்தர்ப்பத்தில் ஹஜ் செய்தார்.

ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களின் கட்டுப்படும் தன்மையைக் கேட்டபோது رَحِمَ اللّٰهُ أَبَا عُبَيْدَةَ எனக் கூறினார்கள். அதாவது அபூ உபைதாவின் மீது அல்லாஹ்வின் கருணை உண்டாகட்டும். அவர் கட்டுப்படுதலின் இத்தகைய தகுதியை நிலைநாட்டினார்.

அபீனுல் உம்மத் சுவர்க்கத்திற்கான நற்செய்தி பெற்ற 10 சஹாபாக்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்தான தகுதியைப் பெற்ற பத்ர் போரில் கலந்து கொண்ட நபித்தோழர் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களின் புகழ்மிக்க பண்புகள் பற்றிய குறிப்பு.

நாம் ஏற்கனவே இந்த துன்பங்களைக் கடந்து சென்று கொண்டிருக்கிறோம்; இனிமேலும் அல்லாஹ்வின் உதவியினால் கடந்து சென்று விடுவோம் – இன்ஷா அல்லாஹ். ஆனால் எதிரிகளாகிய இவர்கள் விலகவில்லையென்றால் அவர்களின் அழிவு நிச்சயமானதாகும்.

அஹ்மதிகளின் எதிரிகளுக்கு எச்சரிக்கையும், பாகிஸ்தான் அஹ்மதிகளுக்கு அல்லாஹ்வுடனுள்ள தொடர்பை அதிகப்படுத்தவும் துஆக்களை செய்யவும் அறிவுரை.

நான் உங்களுடன் ஒரு பொறுப்புணர்வுள்ள ஒருவரை உங்களுடன் அனுப்புவேன். அவர் அதற்குரிய உரிமையை நிறைவேற்றுபவராக இருப்பார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களின் கையைப் பிடித்தார்கள். هٰذَا أَمِيْنُ هٰذِهِ الْأُمَّةِ ஹாதா அமீனு ஹாதிஹில் உம்மதி எனக் கூறினார்கள். இவர் இந்த உம்மத்தின் அமீன் ஆவார்.

ஹஸ்ரத் அபூ ஜர்ராஹ் (ரலி) கவ்த் கோத்திரத்தைச் சேர்ந்தவரின் இரு கழுத்துகளில் ஒன்றை தனது பற்களால் கடித்தார்கள். அது மிக உறுதியாக உள்ளே பதிந்து விட்டது. அதை அவர்கள் இழுத்தபோது முதுகு குப்புற கீழே வீழ்ந்தார்கள். மேலும் அவர்களின் முன்னாலுள்ள ஒரு பல் உடைந்து விட்டது. பிறகு அவர்கள் இரண்டாவது வட்டததையும் பற்களால் கட்டி உறுதியாக இழுத்து வெளியில் எடுத்தார்கள். அவர்களின் முன்னாலுள்ள இரண்டாவது பல்லும் உடைந்து விட்டது.

பாருங்கள்! நீங்கள் எதிரிகளை வெற்றி கொள்ளும்போது, எவருடைய குழந்தைகளையும், முதியோர்களையும், பெண்களையும் கொல்லக் கூடாது. எந்த உயிரினத்தையும் கொல்லக் கூடாது. உடன்படிக்கையை மீறக் கூடாது. உடன்படிக்கை செய்து அதை நீங்களே முறிக்கக் கூடாது.

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 2 அக்டோபர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **25 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ- بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-
إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ- اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ-

பத்ர் சஹாபாக்களைப் பற்றி எடுத்துரைப்பதில் இன்று எடுத்துரைக்கப்படவுள்ள சஹாபி ***ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ்*** ஆவார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் உடைய பெயர் ஆமிர் பின் அப்தில்லாஹ் என்பதாகும். அவரது தந்தையின் பெயர் அப்துல்லாஹ் பின் ஜர்ராஹ் என்பதாகும். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் தனது சுட்டுப்பெயரின் காரணமாக மிகவும் பிரசித்தி பெற்றிருந்தார். ஆனால் அன்னாரது பரம்பரை அன்னாரது பாட்டனார் ஜர்ராஹ் என்பவருடன் இணைத்துக் கூறப்படுகிறது. அன்னாரது தாயார் பெயர் உமைமா பின்த் கனம் என்பதாகும். அன்னாரது தொடர்பு குறைஷி சமுதாயத்தின் பனூ ஹாரிஸ் பின் பெஹர் குடும்பத்துடன் இருந்தது.

(அல் அஸாபா ஃபிதமீஸில் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 475 ஆமிர் பின் அப்துல்லாஹ் தாருல் குதுபுல் இல்மிய்யா வைரூத் லெபனான் 2005)

ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களின் தோற்றம் பற்றி கூறப்படுகையில் அன்னார் உயரமாகவும், உடல் மெலிந்தும் முகத்தில் சதை குறைவாகவும் இருந்தது. முன்னால் இருந்த இரண்டு பற்கள் உஹது போரின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தில் இரும்பு முகக்கவசம் உடைந்து இரண்டு கொக்கிகளின் ஆணிகள் அன்னாரது தாடையில் புதைந்திருந்ததை வெளியே எடுத்தபோது உடைந்தன. அன்னாரது தாடி மிகவும் நெருக்கமற்று இருந்தன. அன்னார் முடிகளுக்க சாயம் உபயோகப்படுத்தி வந்தார்கள். (சீருஸ் ஸஹாபா தொகுதி 2 பக்கம் 135 ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் தாருல் இஷாஅத் உருது பாஸார் கராச்சி) ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் பல திருமணங்கள் செய்திருந்தார்கள். ஆனால் அதில் இரண்டு துணைவியர்களிடமிருந்து மட்டுமே சந்ததிகள் கிடைத்தன. அன்னாருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவரது பெயர் யஸீது, மற்றவரது பெயர் அமீர் என்பதாகும்.

(குலாம் பாரீ சைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் ஸித்தாரே தொகுதி 2 பக்கம் 41)

ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது வாழ்வில் சொர்க்கத்திற்கான நற்செய்தி வழங்கிய அந்த பத்து சஹாபாக்களில் ஒருவராக இருந்தார்கள். அவர்களை அஷ்ரஹ் முபஷ்ஷிரஹ் என்றழைப்பர். (அஸதுல் காபா ஃபி மஃரிபத்திஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 22 ஆமிர் பின் அப்துல்லாஹ் தாருல் ஃபிக்ர் பைரூத் 2003) ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் குறைஷிகளில் உயர்வான, நல்லொழுக்கம் மிகுந்த மற்றும் வெட்க உணர்வு மிகுந்த மக்களில் ஒருவராகக் கருதப்பட்டார்கள். (அல் அஸாபா ஃபிதமீஸில் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 477 ஆமிர் பின் அப்துல்லாஹ் தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2005) ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தப்லீகின் மூலம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். இது முஸ்லிம்களின் தாருல் அர்க்கமில் அடைக்கலம் புகுவதற்கு முன்புள்ள சம்பவமாகும். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றவர்களில் ஒன்பதாவது நபர் ஆவார்கள்.

(பஷீர் சாஜிது உடைய அஷ்ரஹ் முபஷ்ஷிரஹ் பக்கம் 798 அல் பத்ர் பப்ளிகேஷன் உருது பாஸார் லாஹூர் 2000. சீருஸ் ஸஹாபா தொகுதி 2 பக்கம் 124 தாருல் இஷாஅத் பதிப்பு, கராச்சி)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒவ்வோர் உம்மத்திற்கும் ஒரு நம்பிக்கைக்குரியவர் இருப்பார். எனது உம்மத்தின் நம்பிக்கைக்குரியவர் அபூ உபைதா பின் ஜர்ராஹ் ஆவார்கள். (சஹீஹ் புகாரி கிதாபு ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்) பாடம் முனாகிப் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) ஹதீஸ் எண். 3744) சஹீஹ் புகாரியின் அறிவிப்பிற்கேற்ப நஜ்ரான் மக்கள் என்றும் சஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பிக்கேற்ப யமன் மக்கள் என்றும் வருகிறது. அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபையில் வந்து எங்களுக்கு மார்க்கத்தைக் கற்பிக்கக்கூடிய ஒரு நபரை எங்களுடன் அனுப்புங்கள் என்றனர். மற்றோர் அறிவிப்பில் அவர்கள் எங்களுடன் ஒரு நம்பிக்கைக்குரிய நபரை அனுப்புங்கள் என்று கூறியதாக வருகிறது.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக நான் உங்களுடன் ஒரு நம்பிக்கைக்குரிய நபரை அனுப்புவேன்; அவர் அதனுடைய உரிமையைச் செலுத்தக் கூடியவர் ஆவார். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களின் கையைப் பிடித்தார்கள். மேலும் ஹாதா அமீனுன் ஹாதிஹில் உம்மா அதாவது இவர் இந்த உம்மத்தின் நம்பிக்கைக்குரியவர் ஆவார் என்று கூறினார்கள்.

(சஹீஹ் புகாரி கிதாபு ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்) பாடம் முனாகிப் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) ஹதீஸ் எண். 3745. சஹீஹ் முஸ்லிம் கிதாபு ஃபஸாயிலுஸ் சஹாபா பாடம் மின் ஃபஸாயில் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) ஹதீஸ் என். 2419–2420)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூபக்ர், உமர், அபூ உபைதா பின் ஜர்ராஹ், உஸைத் பின் ஹுழீர், சாபித் பின் கைஸ் ஷமாஸ், முஆஸ் பின் ஜபல் மற்றும் முஆஸ் பின் அம்ர் பின் ஜமூஹ் ஆகியோர் எவ்வளவு நல்ல மனிதர்கள் உள்ளனர் எனக் கூறினார்கள். (ஜாமிஉ திர்மிதி அப்வாபுல் முனாகிப் பாப் முனாகிப் முஆஸ் பின் ஜபல் வ ஸைது பின் ஸாபித் (ரலி) ஹதீஸ் எண்.3795) அதாவது அன்னார் அவர்களைப் புகழ்ந்தார்கள். ஒருமுறை ஒரு சபையில் அன்னாரைக் குறித்து பேசப்பட்டிருக்கலாம். அதை ஹஸ்ரத் அபூஹுரைரா அவர்கள் இங்கு எடுத்துரைக்கின்றார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், ஹஸ்ரம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனக்குப் பிறகு யாரையாவது பிரதிநிதியாக ஆக்க விரும்பினால் யாரை நியமிப்பார்கள் எனக் கேட்கப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களை எனக் கூறினார்கள். மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்குப் பிறகு யாரை எனக் கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் ஹஸ்ரத் உமர் எனக் கூறினார்கள். மக்கள் அதன் பின்னர் யாரை எனக் கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் அபூ உபைதா பின் ஜர்ராஹ் என்றார்கள். இது சஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பாகும்.

(சஹீஹ் முஸ்லிம் கிதாபு ஃபஸாயில் சஹாபா பாப் ஃபஸாயில் அபீ பக்ர் ஸித்தீக் ஹதீஸ் எண். 2385)

மற்றோர் அவிவிப்பில், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஷஃபீக் அவர்கள், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தனது சஹாபாக்களில் மிகவும் பிரியமானவர் யார்? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் எனக் கூறினார்கள். அதற்கு அவர், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்குப் பிறகு யார்? எனக் கேட்டார். ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் ஹஸ்ரத் உமர் எனக் கூறினார்கள். அவர் ஹஸ்ரத் உமர் அவர்களுக்குப் பிறகு யார்? எனக் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் எனக் கூறினார்கள். அதன் பின்னர் யார்? என்று அவர் கேட்டார். ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் அதன் பின்னர் அமைதியாகி விட்டார்கள் என அறிவிப்பாளர் கூறுகின்றார்.

(ஜாமிஉ திர்மிதி கிதாபுல் முனாகிப் பாப் முனாகிப் அபு பக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) ஹதீஸ் எண். 3657)

சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் ஆயிஷா அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களுக்கு எந்த அளவு மதிப்பும், மரியாதையும் இருந்ததென்றால் ஹஸ்ரத் உமர் அவர்களின் மரணத்தின்போது ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் உயிருடன் இருந்திருந்தால் அவர்கள்தான் கலீஃபாவாக ஆகி இருப்பார்கள் எனக் கூறி வந்தார்கள்.

(ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எம்.ஏ. அவர்களின் சீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 123)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் உமர் அவர்கள் மரணத்தின் போது கூறினார்கள்: இன்று ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் உயிருடன் இருந்திருந்தால் நான் அவர்களை கலீஃபாவாக நியமித்திருப்பேன். எனது இறைவன் இது தொடர்பாக ஏன் நியமனம் செய்தாய்? எனக் கேட்டால், நான் அவனிடம், நான் உனது நபி (ஸல்) அவர்களிடமிருந்து அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் இந்த உம்மத்தின் அமீன் (நம்பிக்கைக்குரியவர்) ஆவார்கள் எனக் கூறியதைக் கேட்டுள்ளேன். ஆகையால் அவர்களை பிரதிநிதியாக ஆக்கினேன் என்று கூறுவேன் என்றார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லிஇப்னி சஅது தொகுதி 3 பக்கம் 315 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2012)

ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் நம்பிக்கை கொண்ட பிறகு அவர்களது தந்தையார் அவர்களுக்கு அதிகமான துன்பங்களைக் கொடுத்தார்கள். அன்னார் ஹப்ஷா ஹிஜ்ரத்திலும் பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகம் ஜொலிக்க ஆரம்பித்தது. ஹஸ்ரத் உமர் அவர்கள் முன்னே சென்று கட்டித் தழுவினார்கள். பின்னர் அவர்கள் உம்மே கல்ஸூம் பின் ஹதம் அவர்களின் வீட்டில் தங்கினார்கள். உம்மே கல்ஸூம் அல்ல. மாறாக கல்ஸூம் பின் ஹத்ம் அவர்களின் வீட்டில் தங்கினார்கள்.

(குலாம் பாரீ சைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் ஸித்தாரே தொகுதி 2 பக்கம் 11–12. அத்தப்காத்துல் குப்ரா லிஇப்னி சஅது தொகுதி 3 பக்கம் 313 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2012)

ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களின் சகோதரத்துவம் ஏற்படுத்தப்பட்டது தொடர்பாக பல்வேறு அறிவிப்புகள் கிடைக்கின்றன. சிலரது கருத்தின்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரது சகோதரத்துவத்தை ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபாவால் விடுதலை செய்யப்பட்ட அடிமை ஹஸ்ரத் ஸாலம் அவர்களுடன் ஏற்படுத்தப்பட்டதாகவும், சிலரது பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரது சகோதரத்துவத்தை ஹஸ்ரத் முஹம்மது பின் முஸல்லமா அவர்களுடன் ஏற்படுத்தினார்கள் என்றும், சிலரது பார்வையில் அன்னாரது சகோதரத்துவம் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் அவர்களுடன் ஏற்படுத்தினார்கள் என்றும் வருகிறது.

அத்தப்காத்துல் குப்ரா லிஇப்னி சஅது தொகுதி 3 பக்கம் 313 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2012. அல் அஸாபா ஃபிமஃரிஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 476 ஆமிர் பின் அப்துல்லாஹ் தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2005)

ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் பத்ர், உஹது மற்றும் ஏனைய அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். அத்தப்காத்துல் குப்ரா லிஇப்னி சஅது தொகுதி 3 பக்கம் 313 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 1990) பத்ர் போரின் சமயத்தில் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களின் வயது **41** ஆக இருந்தது. அத்தப்காத்துல் குப்ரா லிஇப்னி சஅது தொகுதி 3 பக்கம் 316 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 2012) பத்ர் போர் நாளன்று ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் முஸ்லிம்கள் சார்பாக போர்க்களத்திற்கு வந்தார்கள். அன்னாரது தந்தை அப்துல்லாஹ் காஃபிர்கள் தரப்பிலிருந்து போர்க்களத்திற்கு வந்தார். தந்தையும் மகனும் நேருக்கு நேர் சந்தித்தனர். தந்தை போரின்போது மகனை தனது இலக்காகக் கருதினார். ஆனால் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் அதனை தவிர்த்துக் கொண்டே சென்றார்கள். வேறொரு புறமாகச் சென்று கொண்டிருந்தார்கள்; விலகிக் கொண்டே சென்றார்கள். ஆனால் தந்தையானவர் விடவில்லை. எவ்வாறாவது கொன்று விட வேண்டுமென்று முயன்று கொண்டிருந்தார். அன்னாருக்கும் இவ்வாறு செய்வதற்கு வாய்ப்பு இருந்தது. ஆனால் தந்தையிடம் இருந்து

விலகியிருக்க வேண்டும்; அவரை கொல்லவும் கூடாது; தானும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற முயற்சி மட்டுமே செய்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள், தந்தை விடாமல் பின்தொடர்வதைக் கண்டபோது ஏகத்துவத்தின் உணர்வு குடும்ப உணர்வின் மீது மேலோங்கியது. பிறகு உறவு என்பது ஒன்றுமற்றதானது. தற்போது இவர் என்னைக் கொல்ல வேண்டுமென்ற உறுதியான எண்ணத்துடன், அதுவும் நான் ஏகவத்துவத்தின் மீது நம்பிக்கை கொண்டதனால் மட்டுமே என்னை கொல்ல வேண்டும் என வந்துள்ளார் என்பதனைப் பார்த்தபோது அறிவிப்பில் எழுதப்பட்டுள்ளது. ஏகத்துவத்தின் உணர்வு குடும்பத் தொடர்பின் மீது மேலோங்கியது. தந்தை விடாமல் பின்தொடர்வது ஆகிய இவையெல்லாம் நடந்த பிறகு அன்னாரது தந்தை அப்துல்லாஹ் தனது மகன் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களின் கைகளினால் கொல்லப்பட்டார். இறுதியில் அவரை நிர்ப்பந்தத்தினால் கொலை செய்ய நேர்ந்தது.

(சீருஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 124 பதிப்பு தாருல் இஷாஅத் சராச்சி)

உஹது போரின் சமயத்தில் அப்துல்லாஹ் பின் கமிஆ என்பவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கல்லெறிந்தான். அதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தில் காயம் ஏற்பட்டது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய பற்கள் ஷஹீதாகின. அப்போது அவன் நான் இப்னு கமிஆ ஆவேன் என முழக்கமிட்டான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது அருளுக்குரிய முகத்திலிருந்து இரத்தத்தை துடைத்தவாறு அல்லாஹ் உன்னை இழிவுபடுத்துவானாக எனக் கூறினார்கள்.

அறிவிப்பளார் கூறுகின்றார்: பிறகு என்ன நடந்தது? என்றால், அல்லாஹ் அவன் மீது ஒரு மலை ஆட்டை ஏவினான். அது கொம்பினால் தொடர்ச்சியாக முட்டியது. எந்த அளவுக்கென்றால் அது அவனை துண்டு துண்டாக்கியது. (அல் முஃஜமுல் கபீர் லித்திப்ரானி தொகுதி 8 பக்கம் 154 ஹதீஸ் எண். 7596 மக்தப இப்னு தைமிய்யா காஹிரா 1994)

இந்தச் சம்பவம் தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா அவர்களின் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: உஹது போர் நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தின் மீது கல் எறியப்பட்டது. எந்த அளவு வேகமாக எறியப்பட்டது என்றால் அன்னாரது இரும்பு முகக் கவசத்தின் இரண்டு கொக்கிகள் உடைந்து அன்னாரது அருளுக்குரிய முகத்தில் அதனுடைய ஆணி புகுந்து விட்டது. அதனைக் கண்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பக்கம் விரைந்தார்கள். அப்போது அவர்கள் நான் ஒரு மனிதரைப் பார்த்தேன். அவர் எந்த அளவு வேகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சென்றார் என்றால் அவர் பறந்து செல்வது போன்று தோன்றியது எனக் கூறினார்கள். மேலும் அப்போது நான் அல்லாஹ்வே! ஓடக்கூடிய இந்த மனிதரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும், எங்களுக்கும் மகிழ்ச்சிக்குக் காரணம் ஆக்குவாயாக என துஆ செய்தேன் என்றார்கள். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்றபோது என்னை முந்திச் சென்ற அந்த மனிதர் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களாக இருந்தார்கள். அவர்கள் என்னிடம் அபூபக்ர் அவர்களே! அல்லாஹ்வுக்காக என்னை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத் தாடையிலுள்ள அந்த ஆணிகளை எடுக்க

### திருக்குர்ஆனிலிருந்து...

நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை ஏமாற்ற நினைக்கின்றனர். ஆனால், அவன் அவர்களுடைய ஏமாற்றுதலுக்கு தண்டனை அளிப்பான். அவர்கள் தொழுகைக்காக நிற்கும்போது சோம்பி நிற்கின்றனர். அவர்கள் மக்களுக்குக் காட்டு(வதற்காக தொழு)கின்றனர். மேலும், அல்லாஹ்வைக் குறைவாகவே நினைவு கூருகின்றனர். (4:143)

A. NASIR AHMAD, *Ameer, Melapalayam*

விடுங்கள் என்றார்கள். அதாவது இரும்பு முகக் கவசத்தின் கொக்கி உடைந்து முகத்தில் புகுந்த ஆணியை வெளியே எடுக்க விடுங்கள் என்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நான் அவரை அவ்வாறு செய்ய விட்டேன் என்று கூறுகிறார்கள். ஆக, ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் உடைந்த கொக்கியின் இரண்டு ஆணிகளில் ஒரு ஆணியை தனது பற்களால் கடித்து எந்த அளவு வேகமாக வெளியே எடுத்தார்கள் என்றால் அப்போது அவர் முதுகு குப்புற கீழே விழுந்தார். அந்த அளவு அது வலுவாகப் புதைந்திருந்தது. மேலும் அவரது ஒரு முன் பல்லும் உடைந்தது. பிறகு அவர்கள் அடுத்த ஆணியையும் பற்களால் கடித்து வலுவாக இழுத்து வெளியே எடுத்தார்கள். அன்னாரது முன் பற்களில் இரண்டாவது பல்லும் உடைந்தது. உஹது போரில் மக்கள் சிதறுண்ட சமயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் உறுதியாக நிலைநின்ற மக்களில் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களும் இருந்தார்கள். (அத்தப்காத்துல் குப்ரா லிஇப்னி சஅது தொகுதி 3 பக்கம் 313 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான் 1990) துல் கஃதா ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு ஹுதைபியா சமாதான உடன்படிக்கையில், சமாதான உடன்படிக்கை எழுதியபோது அந்த ஒப்பந்தத்திற்கு இரண்டு நகல்கள் தயார் செய்யப்பட்டன. இருபுறமும் சாட்சியாளராக கண்ணியத்திற்குரிய பலர் அதில் கையொப்பமிட்டனர். முஸ்லிம்கள் சார்பாக கையொப்பம் இட்டவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் உஸ்மான், ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் மற்றும் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் ஆகியோர் இருந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களை பல்வேறு சரிய்யா(படைக் குழு)க்களில் அதாவது போருக்கான பயணங்களில் அனுப்பினார்கள். மேலும் சாராயா என்பது சரிய்யா என்பதன் பன்மையாகும்.

துல் கிஸ்ஸாவை நோக்கி படைக்குழு. இந்தப் பயணம் ஹிஜ்ரி 7 ரபிய்யுல் ஆகிரில் அனுப்பப்பட்டது. இது தொடர்பாக ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் M.A. அவர்கள் தனது நூல் சீரத் காத்தமுன் நபிய்யீனில் எழுதுகிறார்கள்:

ரபிய்யுல் ஆகிர் மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது பின் முஸல்லமா அன்ஸாரி அவர்களை துல்கிஸ்ஸாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அது மதீனாவில் இருந்து 24 மைல் தொலைவில் இருந்தது. அந்த நாட்களில் அங்கு பனூ ஸஅலபா வசித்து வந்தனர். ஹஸ்ரத் முஹம்மது பின் முஸல்லமா மற்றும் அவர்களது பத்து சஹாக்களும் இரவு நேரத்தில் அங்கு சென்றடைந்தனர். அங்கு சென்று பார்த்தபோது அந்த பழங்குடியினரில் நூறு இளைஞர்கள் போருக்கு ஆயத்தமாக இருந்தனர். சஹாபாக்களின் குழுவை விட அவர்களது குழு பத்து மடங்கு அதிகமாக இருந்தது. ஹஸ்ரத் முஹம்மது பின் முஸல்லமா அவர்கள் உடனே அந்தப் படைக்கு முன்பு அணிவகுத்தார்கள். அவர்கள் போருக்காகச் சென்றிருந்தால் இவ்வளவு குறைவான எண்ணிக்கையில் சென்றிருக்க மாட்டார்கள். இருந்தபோதிலும் இரு பிரிவினருக்கும் இடையில் இரவின் இருளில் நன்கு அம்பு எய்தல் நடைபெற்றது. அதன் பின்னர் காஃபிர்கள் கையளவு இருந்த சஹாபாக்களின் கூட்டத்தினைத் தாக்கினர். அவர்களது எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. ஒரு நொடியில் அந்த இஸ்லாத்தின் தியாகிகள் ஷஹீதானார்கள். ஹஸ்ரத் முஹம்மது பின் முஸல்லமா அவர்களின் அனைத்து நண்பர்களும் ஷஹீதாகினர். ஆனால் ஹஸ்ரத் முஹம்மது பின் முஸல்லமா தப்பித்தார்கள். எவ்வாறென்றால் காஃபிர்கள் அவர்களை மற்றவர்களைப் போன்று மரணித்து விட்டார் எனக் கருதி விட்டுச் சென்றனர். அவர்களது ஆடைகளைக் கழற்றி எடுத்துச் சென்று விட்டனர். ஹஸ்ரத் முஹம்மது பின் முஸல்லமா அவர்களும் அங்கேயே கிடந்து இருந்தால் மரணித்திருப்பார்கள். ஆனால் நல்ல வேளையாக மற்றொரு முஸ்லிம் அந்தப் பக்கமாகச் சென்றுள்ளார். அவர் ஹஸ்ரத் முஹம்மது பின் முஸல்லமாவை அடையாளங்கண்டு அவர்களை தூக்கி மதீனா கொண்டு சேர்த்தார். ஹஸ்ரத் நபிகள்

நாயகம் (ஸல்) அவர்களுக்கு இதுபற்றி தெரிய வந்தபோது அன்னார் குறைஷிகளைச் சேர்ந்த மிகப்பெரிய சஹாபாக்களில் ஒருவராகக் கருதப்பட்ட ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களை ஹஸ்ரத் முஹம்மது பின் முஸல்லமாவிற்கு பழிவாங்குவதற்காக துல் கிஸ்ஸாவை நோக்கி அனுப்பினார்கள். அந்த சமயத்தில் பனூ ஸஅலபாவின் மக்கள் மதீனாவை நோக்கி அனுப்பினார்கள். அந்த சமயத்தில் பனூ ஸஅலபாவின் மக்கள் மதீனாவைச் சுற்றியுள்ள பகுதிகளில் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் தகவல் கிடைத்தது. இவ்வாறு ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களின் தலைமையில் திறமை பெற்ற நாற்பது சஹாபாக்களின் குழு அனுப்பப்பட்டது. மேலும் இரவோடு இரவாக பயணம் செய்து விடியற்காலையில் அங்கு சென்று சேர்ந்திருக்க வேண்டும் என கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவாறு சரியாக சுபுஹ் தொழுகை வேளையில் அங்கு சென்று அவர்கள் மீது திடீர் தாக்குதல் நடத்தினார்கள். அந்த திடீர் தாக்குதலினால் அவர்கள் பயந்து சிறிது சண்டையிட்ட பிறகு ஓடி அருகில் இருந்த மலையில் சென்று மறைந்து விட்டனர். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் போர்ச் செல்வங்களைக் கைப்பற்றி மதீனாவின் பக்கம் திரும்பினார்கள். (ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எம்.ஏ அவர்களின் சீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 668) இந்த தாக்குதல் அநீதிக்குப் பழிவாங்குவதற்கு அல்லது தண்டனை வழங்குவதற்காக நடத்தப்பட்டது.

இரண்டாவது நடைபெற்ற சரிய்யாவின் அதாவது போரின் பெயர் தாத்துல் ஸலாஸில் ஆகும். இதற்கு தாத்துஸ் ஸலாஸில் என்ற பெயர் வருவதற்குக் காரணம் எதிரிகள் அச்சத்தின் காரணமாக இணைந்து போரிடவும் யாரும் ஓடி விடக்கூடாது என்பதற்காகவும் ஒருவர் மற்றவரை சங்கிலியால் கட்டிக் கொண்டனர். ஓர் அணியில் இணைந்து போரிடுவதற்கும் அல்லது எவ்வாறு வரிசை அமைக்கப்பட்டுள்ளதோ இணைந்தே இருப்பதற்கும் இவ்வாறு செய்தனர். இதற்கு மற்றொரு காரணமும் காணக் கிடைக்கிறது. அது என்னவென்றால், அவ்விடத்தில் ஒரு நீரூற்று இருந்தது. அதன் பெயர் அஸ்ஸல்ஸல் ஆகும். சிலரது பார்வையில் ஹிஜ்ரி 8 –ல், சிலரது பார்வையில் ஹிஜ்ரி 7 –ல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பனூ கஸாஆ கோத்திர மக்கள் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு திட்டம் தீட்டுவதாக செய்தி கிடைத்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களை 300 முஹாஜிரீன் மற்றும் அன்ஸாருடன் அவர்களை அடக்குவதற்காக அனுப்பி வைத்தார்கள். அவர்களுடன் 300 குதிரையும் இருந்தது. இது மதீனாவிலிருந்து பத்து நாள் பயணத் தொலைவில் இருந்தது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள் பனூ கஸாஆ பகுதியை அடைந்தும் அங்கிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்க எதிரிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. ஆகையால் மேலும் படைகளை அனுப்புங்கள் என தூது அனுப்பினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தூது கிடைத்ததும் 200 முஹாஜிரீன் மற்றும் அன்ஸாரின் குழுவை ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களின் தலைமையில் உதவிக்காக அனுப்பி வைத்தார்கள். மேலும் அம்ரை சென்று சந்தியுங்கள். அவருடன் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள் என அறிவுறுத்தினார்கள். அதாவது எந்த முடிவு எடுத்தாலும் ஒன்றிணைந்து எடுங்கள் என்றார்கள். இந்தப் படை ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களின் படையுடன் இணைந்தவுடம் முழு படையின் தலைமை தொடர்பான கேள்வி எழுந்தது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள் தனது அந்தஸ்தின் அடிப்படையில் தலைமைக்கு தகுதியானவர்களாக இருந்தார்கள். ஆனால் அம்ர் பின் ஆஸ் அவர்கள் நான் தான் முழு படைக்கும் தலைமை வகிப்பேன் என வலியுறுத்தினார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் மகிழ்ச்சியுடன் அன்னாரத தலைமையை ஏற்றுக் கொண்டார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளை, கருத்து வேறுபாடு கொள்ளக் கூடாது என்று இருந்தது. அவர்களின் தலைமையின் கீழ் முழு வீரத்துடன் எதிரிகளுடன் சண்டையிட்டார்கள். எந்த அளவுக்கு என்றால் எதிரிகள் தோல்வி அடைந்தனர். வெற்றி பெற்ற பின் மதீனா திரும்பி வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களின் கீழ்ப்படிதலின் தரம் குறித்து கேள்விப்பட்டதும் அபூ உபைதாவே! உம் மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக எனக் கூறினார்கள். அதாவது கீழ்ப்படிதல் இந்த தரத்தை நிலைநாட்டியதற்காக அல்லாஹ் உம் மீது கருணை காட்டுவானாக என்றார்கள்.

(ரஹ்மத் தரீன் சொஸேதாஇ அஸ் தாலிப் ஹாஸ்மீ பக்கம் 33 அல் பத்ர் பப்ளிகேஷன் உருது பாஸார் லாஹூர் 2003. ஷரஹ் ஸர்க்கானீ தொகுதி 2 பக்கம் 357–360 சரிய்யா ஸாத்துஸ் ஸளாஸில் தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 1996)

பிறகு சைஃபுல் பஹர் போர். இந்தப் போர்கள் அனைத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கலந்து கொள்ளாத போர்களாகும். இவற்றை சரிய்யா எனக் கூறுவர். இந்தப் படைக்குழு ஹிஜ்ரி எட்டம் ஆண்டில் கடற்கரைப் பகுதியில் வசித்து வந்த பனூ ஜுஹைனா என்ற ஒரு கோத்திரத்தை நோக்கி அனுப்பி வைக்கப்பட்டது. இந்தப் போருக்கு ஜைஷுல் கப்த் என்றும் கூறுவர். இந்தப் பெயர் வருவதற்கான காரணம் உணவுப் பற்றாக்குறையின் காரணமாக சஹாபாக்கள் மரங்களின் இலைகளை உண்ணும் நிர்பந்தம் ஏற்பட்டது. கபத் என்பதற்கு இலைகளைப் பறித்தல் என்றும் கூறுவர். இந்தப் போரைப் பற்றி சஹீஹ் புகாரியிலும் கூறப்பட்டுள்ளது. அதில் இவ்வாறு வருகிறது. அதாவது ஹஸ்ரத் ஜாபிர் அவர்கள் இந்த அறிவிப்பைச் செய்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 300 சவாரிகளைக் கொண்ட எங்களை அனுப்பினார்கள். எங்களது அமீராக ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் இருந்தார்கள். நாங்கள் குறைஷிகளின் வணிகக் குழுவைக் கண்காணிப்பதற்காக அமர்ந்திருந்தோம். இங்கு அவர்கள் போரிடுவதற்கான எண்ணத்தில் செல்லவில்லை. நாங்கள் கடற்கரையில் அரை மாதம் தங்கியிருந்தோம். எங்களுக்கு அதிகமான பசி ஏற்பட்டது. எந்த அளவுக்கு என்றால் நாங்கள் இலைகளையும் கூட உண்டோம். சில சமயங்களில் படைக்குழு செல்லும்; போர் புரியும் எண்ணத்தில் செல்வதில்லை. மாறாக, வேறு சில நோக்கங்களுக்காகவும் இருக்கும். பிறகு சில சமயங்களில் போரையும் எதிர்கொள்ள நேரிட்டது. ஆகையால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கலந்து கொள்ளாத இந்த செயல் இரண்டு வகையிலும் இது சரிய்யா என்றழைக்கப்படுகிறது. எவ்வாறிருப்பினும் அவர்கள் நாங்கள் இலைகளை உண்டோம் என்று கூறுகின்றனர். இதனால் இந்தப் படையின் பெயர் ஜைஷுல் கப்த் என்று வைக்கப்பட்டது. இந்தத் தருணத்தில் எங்களுக்காக கடல் விலங்கு ஒன்று வெளியே எறிந்தது. அதனை அம்பர் என்று கூறுவார்கள். அதாவது ஒரு விலங்கு இறந்து கடலிலிருந்து வெளியே வந்தது அல்லது உயிருடன் வந்து நீரில்லாமல் மரணித்தது. எவ்வாறிருப்பினும் கடலிலிருந்து வந்தது மீனாகவே இருந்தது. அது பெரிய மீனாக இருந்தது. அதன் இறைச்சியை நாங்கள் பாதி மாதம் வரை சாப்பிட்டு வந்தோம். அதன் கொழுப்பை உடலில் பூசி வந்தோம். எந்த அளவுக்கு என்றால் எங்களது தோல் முன்பு புதிதாக இருந்தது போன்று ஆகி விட்டது. ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் அதன் எலும்பில் ஓர் எலும்பை எடுத்தார்கள். அதனை நிற்க வைத்தார்கள். அவர்களுடன் இருந்த மிகவும் உயரமான நபர் அதனை வாங்கினார்கள்.

ஒருமுறை ஸுஃப்யான் பின் அய்யினா அவர்கள் தனது அறிவிப்பில் இவ்வாறு கூறுகின்றார்கள்: அவர்கள் அதன் எலும்பில் ஓர் எலும்பை எடுத்தார்கள். அதனை நிற்க வைத்தார்கள். ஒரு மனிதர் ஒட்டகத்துடன் அதன் கீழாக சென்று விட்டார்.


**திருக்குர்ஆனிலிருந்து...**

நீங்கள் நன்றி செலுத்தி நம்பிக்கையும்
கொள்வீர்களாயின் உங்களைத் தண்டிப்பதில்
அல்லாஹ்விற்கு என்ன கிடைக்கப் போகிறது?
அல்லாஹ் மதிக்கக் கூடியவனும் நன்கு
அறிபவனுமாவான். (4:148)

A. SAMSUL ALAM
*Qaid, Majlis Khuddamul Ahmadiyya, Melapalayam*

ஹஸ்ரத் ஜாபிர் அவர்கள் இவ்வாறும் கூறுகின்றார்கள்: படையில் ஒருவர் இருந்தார். அவர் வீரர்கள் சாப்பிடுவதற்கு மூன்று நாட்கள் மூன்று ஒட்டகங்களை அறுத்தார். பிறகு ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் அவரைத் தடுத்தார்கள்.

அம்ர் பின் தய்னார் கூறுகின்றார். அபூ ஸாலிஹ் ஸக்வான் அவர்கள் எங்களிடம் கூறினார்கள். கைஸ் பின் சஅது அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிப்பு செய்கின்றார்கள்: நானும் அந்தப் படையில் இருந்தேன். அவர்களுக்கு பசித்த போது ஹஸ்ரத் அபூ உபைதா, அவர் ஒட்டகத்தை அறுக்கும்படி கூறினார்கள். நான் ஒட்டகத்தை அறுத்தேன். மீண்டும் அவர்களுக்கு பசித்தது. ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் ஒட்டகத்தை அறுக்கும்படி கூறினார்கள். பொருள்களைச் சுமந்து சென்ற ஒட்டகத்தில் மேலும் சில பொருட்களும் இருந்திருக்கலாம். அவர்களின் நிலை எவ்வாறிருந்தது என்றால் அவற்றை அறுத்துச் சாப்பிட்டு வந்தனர். அவர் நான் ஒட்டகத்தை அறுத்தேன். கைஸ் அவர்கள் கூறுகின்றார்கள். மீண்டும் அவர்களுக்கு பசித்தது. ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் ஒட்டகத்தை அறுக்கும்படி கூறினார்கள். பிறகு என்னை ஒட்டகத்தை அறுக்க வேண்டாம் என தடுத்து விட்டார்கள்.

மற்றோர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் அவர்கள் கூறுகின்றார்கள்: ஜைஷுல் கப்த்துடன் நாங்கள் தாக்குதலுக்காகக் கிளம்பினோம். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் அமீர் ஆக்கப்பட்டிருந்தார்கள். எங்களுக்கு அதிகமாக பசித்தது. கடலிலிருந்து இறந்த ஒரு மீன் ஒதுங்கியது. அது உயிருடன் இருக்கவில்லை. மாறாக மரணித்திருந்தது. நாங்கள் அப்படிப்பட்ட மீனை ஒருபோதும் கண்டதில்லை. பெரிய மீனாக இருந்தது. அதன் உருவம் பற்றி கூறுவதைப் பார்த்தால் திமிங்கிலமாக இருந்திருக்கலாம். அதனை அம்பர் என்று கூறுவார்கள். அதன் இறைச்சியை பாதி மாதம் சாப்பிட்டு வந்தோம். அதன் பின்னர் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் இந்த மீனை சாப்பிடுங்கள்; மரணத்திருந்தாலும் பரவாயில்லை என்று கூறினார்கள். நாங்கள் மதீனா வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இவ்வாறு கடலிலிருந்து இறந்த மீன் ஒன்று வந்தது. நாங்கள் அதனை அவசியமாக இருந்ததால் சாப்பிட்டு வந்தோம் எனக் கூறினோம். அன்னார் அல்லாஹ் படைத்த ரிஸ்கை நீங்கள் சாப்பிடுங்கள் என்றார்கள். அல்லாஹ் உங்களின் நிலையைக் கண்டு உங்களுக்காக அனுப்பியுள்ளான். ஆகையால் அதனை சாப்பிடுவதால் பிரச்சனை இல்லை என்று கூறினார்கள். அதில் ஏதாவது எஞ்சியிருந்தால் எனக்கும் கொடுங்கள். தன்னுடன் ஏதாவது கொண்டு வந்துள்ளீர்களா? என்றார்கள். அவர்களில் ஒருவர் பெருமானாருக்கு ஒரு பகுதியைக் கொடுத்தார். பெருமானார் (ஸல்) அவர்கள் அதனை உண்டார்கள். வீரர்கள் திரும்பி வரும்போது எஞ்சியிருந்த இறைச்சியைக் கொண்டு வந்தார்கள். அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் உண்டார்கள். (சஹீஹ் புகாரி கிதாபுல் மகாஸி பாப் கஸ்வத்துஸ் ஸைபுல் பஹ்ர் ஹதீஸ் எண். 4361–4362)

ஹஸ்ரத் ஸய்யிது ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் அவர்கள் தனது விளக்கவுரையில் இந்த சைஃபுல் பஹ்ர் போரைப் பற்றி எழுதுகிறார்கள்: சைஃபுல் பஹ்ர் என்பது கப்த் என்று கூறக்கூடியதே ஆகும். மேற்கூறப்பட்ட போர், போர் புரிய வேண்டும் என்ற நோக்கம் இல்லாமல் சென்ற போர்களில் ஒன்றாகும். மேலும் இந்தப் போரில் பங்கு பெற்றவர்கள் வணிகக் குழுவின் பாதுகாப்பிற்காக அனுப்பப்பட்டவர்கள்தான். இந்தப் படை இப்னு சஅது அவர்களின் கூற்றிற்கேற்ப 300 முஹாஜிரீன் மற்றும் அன்ஸாரைக் கொண்டதாக இருந்தது. ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் அதன் அமீராக இருந்தார்கள். இது சைஃபுல் பஹ்ர் என்ற பெயரால் அறியப்பட்டது. கார்வாணி பகுதியின் அருகில் செங்கடலின் ஓரங்களில் ஒரு பாதுகாப்புச் சோதனை வடிவில் அமைக்கப்பட்டிருந்தது. இதனால் இது சைஃபுல் பஹ்ர் என்று அழைக்கப்படுகிறது. இந்தப் படை அனுப்பப்பட்டதன் நோக்கம் என்னவென்றால் இந்தப் படை அங்கு பாதுகாப்பிற்காக ஒரு சோதனைச் சாவடி அமைக்க வேண்டும் என்பதாக இருந்தது. யாருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பது இனிதான் தெரியும். சைஃப் என்பதன் பொருள் கடற்கரை என்பதாகும்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

**நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரக ஆழத்தின் அடிமட்டத்தில் இருப்பர். அவர்களுக்கு உதவி செய்பவராக [எவரையும்] நீர் ஒருபோதும் காண மாட்டீர். [4:146]**

A. BASHEER AHMAD, *Melapalayam*

இப்னு சஅது அவர்கள் கப்த் போர் என்ற தலைப்பில் சுருக்கமாக எழுதியுள்ளார்கள்: கப்த் என்பதன் பொருள் மரத்தின் இலைகள் என்பதாகும். பயண உணவு தீர்ந்து விட்ட காரணத்தால் வீரர்களுக்கு இலைகளைச் சாப்பிட நேர்ந்தது. இப்னு சஅது அவர்கள் இந்தச் சம்பவம் ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு நடைபெற்றதாக கூறுகின்றார்கள். இது ஹுத்னா அதாவது ஹுதைபிய்யா உடன்படிக்கை நடைபெற்ற காலமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் பணியாற்றி, முன்னெச்சரிக்கையாக மேற்கூறப்பட்ட பாதுகாப்புப் படையை சிரியாவிலிருந்து வரும் குறைஷி வணிகக் குழுவுடன் பிரச்சனை எதுவும் ஏற்பட்டு விடக்கூடாது. மேலும் இதன் மூலம் குறைஷிகளுக்கு உடன்படிக்கையை முறிப்பதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக சோதனைச் சாவடி அமைக்க சைஃபுல் பஹ்ர் பகுதிக்கு அனுப்பி வைத்தார்கள். இதற்கு முன்பு ஹுதைபிய்யா உடன்படிக்கை ஏற்பட்டிருந்தது. ஆகையால் அங்கு யாரும் குறைஷிய வணிகர்களைச் சீண்டி விடக்கூடாது. பிறகு குறைஷிகள், பாருங்கள்! முஸ்லிம்கள் எங்கள் மீது தாக்குதல் நடத்தி விட்டார்கள். ஆகையால் ஹுதைபிய்யாவின் உடன்படிக்கை முறிந்து விட்டது என்ற சாக்குப் போக்கு உருவாகி விடக்கூடாது என்பதற்காக அன்னார் சோதனைச் சாவடி அமைத்து குறைஷிகளின் வணிகக் குழுவைப் பாதுகாப்பதற்கு அந்தப் படையை அனுப்பினார்கள்.

அடுத்து அவர் எழுதுகிறார்: இப்னு சஅது அவர்களின் கூற்றிக்கேற்ப மேற்கூறப்பட்ட அந்த இடம் மதீனாவிலிருந்து ஐந்து நாட்கள் பயண தூரமாக இருந்தது. (சஹீஹ் புகாரி கிதாபுல் மகாஸீ பாப் கஸ்வத்துஸ் சைபுல் பஹ்ர் தொகுதி 9 பக்கம் 239 வெளியீட்டாளர் நாஸாரத் இஷாஅத் ரப்வா) ஆக, இது போருக்காகச் சென்றதல்ல. மாறாக காஃபிர்களைப் பாதுகாக்க அனுப்பப்பட்டதாகும். நான் ஏற்கனவே கூறியது போன்று இது அமைதியை நிலைபெறச் செய்ய எடுக்கப்பட்ட முயற்சியாகும். அதாவது எதிரிகளின் பொருட்களையும் பாதுகாக்க வேண்டும். உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர் எதிரிகள் அந்த உடன்படிக்கையை முறிப்பதற்கு எவ்வித வாய்ப்பும் உருவாகக் கூடாது. எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வின் நியதிதான் செயல்பட வேண்டியது இருந்தது. உடன்படிக்கை முறிந்தது என்றால் காஃபிர்களின் தரப்பிலிருந்துதான் முறிக்கப்பட்டது. ஆனால் மக்கா வெற்றியின்போது அதன் விளைவு வெளிப்பட்டது.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மக்கா வெற்றி நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் நுழைந்தார்கள். ஹஸ்ரத் ஜுபைர் அவர்களைப் படையின் ஒருபுறமும் ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்களை படையின் மற்றொரு புறமும் நியமித்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களை காலாட்படை மற்றும் பள்ளத்தாக்குப் பகுதிகளுக்குத் தலைவராக நியமித்தார்கள். (சஹீஹ் முஸ்லிம் கிதாபுஸ் ஜிஹாது பாப் ஃபதஹ் மக்கா ஹதீஸ் எண். 1780) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பஹ்ரைன் மக்களுடன் ஜிஸ்யாவின் நிபந்தனையின் கீழ் சமாதானம் செய்தார்கள். மேலும் அதற்கு ஹஸ்ரத் அலா பின் ஹஸ்ரமி அவர்களை அமீராக நியமித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அங்கு ஜிஸ்யா வசூல் செய்வதற்காக அனுப்பினார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் ஜிஸ்யா வசூல் செய்து திரும்பி வந்தார்கள். அவர்கள் திரும்பி வருவது தொடர்பாக மக்களுக்குத் தெரிய

வந்தவுடன் மக்கள் அனைவரும் சுபுஹ் தொழுகையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் தொழுதார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகை நடத்தினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்னால் திரும்பி அவர்களைப் பார்த்து, உங்களுக்கு ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் ஏதோ கொஞ்சம் கொண்டு வந்துள்ளார்கள் எனத் தெரிய வந்து விட்டது போல என சிரித்தவாறு கூறினார்கள். மக்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஆமாம் எனக் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மகிழ்ச்சி கொள்ளுங்கள்; உங்களுக்குச் சிறந்தது கிடைப்பதற்கு நம்பிக்கை கொள்ளுங்கள் என்றார்கள். நான் உங்களுடைய ஏழ்மையைக் கண்டு அஞ்சவில்லை. ஆனால் உங்களுக்கு உலக வசதி ஏற்படுத்தப்பட்டு விட்டால் பிறகு நீங்கள் அதிக அளவு பேராசை கொள்ள ஆரம்பித்து விடுவீர்கள். (சஹீஹ் புகாரி கிதாபுல் ஜிஸ்யா வல் முவாயிதா பாப் அல்ஜிஸ்யத்து வல் முவாயிதா மஅ அஹ்லுஸ் ஸிம்மத வல்ஹர்ப் ஹதீஸ் எண். 3158) எந்த அளவு நீங்கள் உலகியலில் மூழ்குவீர்களோ உலக வசதிகள் உங்களுக்கு கிடைக்குமோ அந்த அளவு நீங்கள் பேராசையில் மூழ்கி விடுவீர்கள். அது உங்களை அழித்து விடும். இந்தப் பயம்தான் எனக்கு இருக்கிறது. பட்டினியால் இருப்பது பற்றிய பயம் குறைவுதான். ஆனால் உலகியலில் ஈடுபட்டு நீங்கள் பேராசை கொண்டு தன்னைத்தானே அழித்துக் கொள்வீர்கள் என்ற அச்சம்தான் (அதிகம்) உள்ளது. ஆக, இந்த எச்சரிக்கையைத்தான் ஒவ்வொருவரும் கண்முன் நிறுத்த வேண்டும். இதனை கண்முன் நிறுத்தாத காரணத்தினால் இன்று உலகில் செல்வம் வரக்கூடிய பெரும்பான்மையான முஸ்லிம்கள் அதில் நமது தலைவர்களும் அடங்குவார்கள். இந்தப் பேராசையில் முன்னிலை வகிப்பதை நம்மால் காண முடிகிறது. அவர்களது உலக ஆசைகள் எண்ணற்றவாறு ஆகி விட்டன. இறைவனது பெயரை கூறுகின்றார்கள்; ஆனால் உலகச் செல்வங்களுக்கு முன்னுரிமை வழங்குகிறார்கள். ஆக இந்த வகையில் நாம் நமது நிலைமைகளை ஆய்வு செய்து கொண்டேயிருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப செல்வம் வரத்தான் செய்யும். ஆனால் நாம் அந்தச் செல்வத்தினால் நமது மார்க்கத்தை மறந்து விடக்கூடாது.

ஹிஜ்ரி பத்தில் ஹஜ்ஜத்துல் விதா சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஹஜ் செய்தார்கள். (பஷீர் சாஜிது உடைய அஷ்ரஹ் முபஷ்ஷிரஹ் பக்கம் 801 அல் பத்ர் பப்ளிகேஷன் உருது பாஸார் லாஹூர் 200) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் ஏற்பட்டபோது மக்கள் மத்தியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கபர் உட்புறமாக குழியாக இருக்க வேண்டுமா? அல்லது உட்புறம் குழியில்லாமல் இருக்க வேண்டுமா? என்ற சர்ச்சை ஏற்பட்டது. இந்த வகையில் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் மற்றும் ஹஸ்ரத் அபூ தல்ஹா அவர்களை நோக்கி ஒவ்வொரு நபரையும் அனுப்பினார்கள். இவர்களில் யார் முதலில் வருவார்களோ மேலும் அவர் என்ன கூறுவாரோ அதன்படியே கபர் ஆயத்தம் செய்யப்படும் என்றார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் மக்கவாசிகளின் பழக்கத்திற்கேற்ப உட்புற குழி இல்லாமல் கபர் அமைத்து வந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூ தல்ஹா அவர்கள் மதீனாவாசிகளின் பழக்கத்திற்கேற்ப உட்புற குழி கொண்ட கபரை அமைத்து வந்தார்கள். இவ்வாறு ஹஸ்ரத் அபூ தல்ஹா அவர்களை நோக்கி அனுப்பிய நபர் ஹஸ்ரத் அபூ தல்ஹா அவர்களைச் சந்தித்தார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூ உபைதாவை நோக்கி அனுப்பிய நபர் அன்னாரைச் சந்திக்கவில்லை. இவ்வாறு ஹஸ்ரத் அபூ தல்ஹா அவர்கள் வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உட்புற குழி கொண்ட கபரை ஆயத்தம் செய்தார்கள்.

(சீரத் இப்னு ஹஷ்ஷாம் தொகுதி 2 பக்கம் 663 ஹஃப்ருல் கபர் பதிப்பு முஸ்தஃபா பாபில் ஹப்லீ வஅவ்லாதா எகிப்து 1955)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு கிலாஃபத்திற்காக அன்ஸார் மற்றும் முஹாஜிர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இது தொடர்பாக சஹீஹ் புகாரியில் இடம்பெற்றுள்ளது. அதுபற்றி இதற்கு முன்பும் ஒரு சஹாபியின் குறிப்பில் எடுத்துரைக்கப்பட்டது. இருந்தாலும் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் குறிப்பிலும் எடுத்துரைத்தால் சிறப்பாக இருக்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் சஅது பின் உபாதா அவர்களின் வீட்டில் ஒன்று கூடினர். அவர்கள் உங்களிலிருந்து ஓர் அமீரும் எங்களிலிருந்து ஓர் அமீரும் அதாவது முஹாஜிரீன்களில் ஓர் அமீரும் இருக்க வேண்டும் எனக் கூறினர். அவர்களின் பக்கம் அபூபக்ர், ஹஸ்ரத் உமர் மற்றும் ஹஸ்ரத் அபூ உபைதா ஆகியோர் சென்றனர். ஹஸ்ரத் உமர் அவர்கள் ஏதோ சொல்ல முயன்றார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அன்னாரைத் தடுத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறுகின்றார்கள்: அந்நேரத்தில் நான் எனக்கு விருப்பமான ஓர் உரையைத் தயார் செய்து வைத்திருந்ததால் பேச விரும்பினேன். ஏனென்றால் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களால் இப்படிப்பட்ட கருத்தைக் கூற முடியாது என்று நான் அஞ்சினேன். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் மிகவும் சிறப்பான, தெளிவான உரை நிகழ்த்தினார்கள். அது அனைத்து உரைகளையும் விட சிறப்பானதாக இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் முஹாஜிர்கள் அமீராகவும் அன்ஸார் அமைச்சர்களாகவும் இருப்பார்கள் எனக் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூ ஹப்பாப் பின் முன்ஸிர் அவர்கள், இறைவன் மீது ஆணையாக! நாங்கள் அவ்வாறு ஒருபோதும் செய்ய விடமாட்டோம். உங்களில் ஓர் அமீரும், எங்களில் ஓர் அமீரும் இருப்பார்கள் என்றார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் நாங்கள் அமீர் ஆவோம். நீங்கள் அமைச்சர் ஆவீர்கள். ஏனென்றால், குறைஷிகள் பாரம்பரியத்தில் உங்களை விட உயர்ந்தவர்களும், பழமையானவர்களும் ஆவர் என்றார்கள். இவ்வாறு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள், 'ஹஸ்ரத் உமர் மற்றும் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் ஆகிய இருவரின் பெயர்களை முன்மொழிந்தார்கள். உமர் அல்லது அபூ உபைதா பின் ஜர்ராஹ் ஆகிய இருவரில் ஒருவரிடம் பைஅத் செய்து கலீஃபாவாக ஆக்கிக் கொள்ளுங்கள்' என்றார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம், 'இல்லை; நாங்களோ உங்களிடம் தான் பைஅத் செய்வோம் என்றார்கள். ஏனென்றால் நீங்கள் எங்கள் தலைவர் ஆவீர்கள். எங்களில் மிகச் சிறந்தவர் ஆவீர்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் விருப்பமான நபர் ஆவீர்கள்' எனக் கூறி ஹஸ்ரத் உமர் அவர்கள் அன்னாரது கையைப் பிடித்து அவர்களிடம் பைஅத் செய்தார்கள். (சஹீஹ் புகாரி கிதாபுல் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்) லவ் குன்து முத்தகீதா கலீலன் ஹதீஸ் எண். 3668) எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் அந்தஸ்து இதுவாக இருந்தது. அதாவது அன்னார் அவர்களது பெயரை கலீஃபாவிற்காகப் பரிந்துரைத்தார்கள். இவ்வாறு முன்னர் கூறியதுபோன்று ஹஸ்ரத் உமர் அவர்கள் தொடர்பாகவும் வருகிறது. அதாவது, ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா உயிருடன் இருந்திருந்தால் நான் அவர்களை அடுத்த கலீஃபாவாக நியமனம் செய்திருப்பேன் எனக் கூறினார்கள். ஏனென்றால் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றிற்கேற்ப நம்பிக்கைக்குரியவராக இருந்தார்கள். கிலாஃபத் தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டபோது ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் அன்ஸாரை நோக்கி அன்ஸார் கூட்டத்தினரே! நீங்கள் தான் எங்களுக்கு முதன் முதலில் உதவி செய்தீர்கள். இப்போது நீங்களே முதலில் முரண்பாட்டை உருவாக்கக் கூடியவர்களாக ஆகி விடாதீர்கள். (ஷாஹ் முஅய்னுத்தீன் நத்வீயுடைய ஸீருஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 126–127

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து நன்மை செய்பவராகி
இப்ராஹீமின் நேரான மார்க்கத்தைப் பின்பற்றுகிறவரை விட
அழகான மார்க்கத்தையுடையவர் யார்? அல்லாஹ்
இப்ராஹீமைத் தன் நெருங்கிய நண்பராக
ஆக்கிக் கொண்டான். (4:126)

S.S.H. MUHAMMED LEBBAI, *Melapalayam*

தாருல் இஷாஅத் உருது பாஸார் கராச்சி) ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கிலாஃபத் பொறுப்பில் அமர்ந்தவுடன் பைத்துல் மால் உடைய பொறுப்பை ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களிடம் ஒப்படைத்தார்கள். ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அன்னாரை சிரியாவின் பக்கம் படையின் அமீராக நியமித்து அனுப்பினார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் கிலாஃபத் பொறுப்பில் அமர்ந்த பிறகு ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்களை படைத் தளபதியிலிருந்து அகற்றி ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களை படையின் தளபதியாக நியமித்தார்கள். (சீர் அஃலாமுன் நப்லா தொகுதி 1 பக்கம் 15 அபூ உபைதா பின் ஜர்ராஹ் பதிப்பு தாருர் ரிஸாலா அல் இல்மிய்யா டமாஸ்கஸ் 2014)

சிரியா வெற்றி தொடர்பாக இவ்வாறு கூறப்படுகிறது. அதாவது ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டு ரோமானியர்களின் மீது பல பகுதிகளில் இருந்து படை எடுக்கப்பட்டது. ஒரு குழுவிற்கு ஹஸ்ரத் யஸீத் பின் அபூ ஸுஃப்யான் வழிகாட்டியாக இருந்தார்கள். அபூ ஸுஃப்யான் அவர்களின் ஒரு மகன் பெயரும் யஸீதாக இருந்தது. அவர்கள் முன்னர் மரணமடைந்து விட்டார்கள். அவர்கள் உருதன் கிழக்குப் பகுதியிலிருந்து தாக்குதல் தொடுத்தார்கள். இரண்டாவது வழிகாட்டியாக ஹஸ்ரத் ஷுரஹ் பீல் பின் ஹஸனா அவர்கள் பல்காவின் வழியாக முன்னேறி வந்தார்கள். மூன்றாவது வழிகாட்டியாக ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள் பாலஸ்தீன் வழியாக சிரியாவில் நுழைந்தார்கள். நான்காவது குழுவின் வழிகாட்டியாக ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் ஹிமஸ் வழியாக முன்னேறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள், இவர்கள் அனைவரும் ஓரிடத்தில் ஒன்று சேரும்போது ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் தளபதியாக செயல்படுவார்கள் எனக் கூறினார்கள். ஒவ்வொரு படையும் நான்காயிரம் வீரர்களைக் கொண்டதாக இருந்தது. ஆனால் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களின் படை எட்டாயிரம் வீரர்களைக் கொண்டதாக இருந்தது. படை புறப்படும்போது ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் படைகளின் வழிகாட்டிகளிடம் பாருங்கள்! தன் மீதும் தனது நண்பர்கள் மீதும் கஷ்டத்தை வரவிடக் கூடாது. தனது சமுதாயம் மீதும், நண்பர்கள் மீதும் கோபத்தை வெளிப்படுத்தக் கூடாது. அவர்களிடமும் ஆலோசனை பெற வேண்டும். நீதியுடன் செயல்பட வேண்டும். அநீதி மற்றும் அநியாயம் போன்றவற்றிலிருநது விலகியிருக்க வேண்டும். அநீதியாளர் ஒருபோதும் வெற்றி பெற மாட்டார். ஒருபோதும் வெற்றியின் முகத்தைக் காணமாட்டார். எதிரியுடன் சண்டையிடும்போது ஒருபோதும் புறமுதுகு காட்டக் கூடாது. அல்லாஹ் கூறுகின்றான்: அன்றைய நாள் சண்டைக்காக இடம் மாறுபவர் மற்றும் தனது நண்பர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்காக இடம் மாறுபவரைத் தவிர எவர் புறமுதுகு காட்டுவாரோ அவர் மீது இறைவனது கோபம் ஏற்படும். மேலும் அவரது இருப்பிடம் நரகமாகும்.

மேலும் திருக்குர்ஆனின் அதிகாரம் அன்ஃபாலின் வசனம் 70 –ல் எழுதப்பட்டுள்ளது. அதாவது பாருங்கள். நீங்கள் எதிரியின் மீது வெற்றி கொண்டால் எந்த முதியவர்களையும் பெண்களையும் கொலை செய்யக் கூடாது; எந்த விலங்குகளையும் கொல்லக் கூடாது; வாக்குறுதியை மீறக்கூடாது; உடன்படிக்கை செய்தால் அதனை முறிக்கக் கூடாது எனக் கூறினார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் தான் முதன் முதலில் சிரியாவின் நகரமான மாபை வெற்றி கொண்டார்கள். அங்குள்ள மக்களிடம் ஜெஸியாவின் நிபந்தனையின் கீழ் சமாதானம் செய்தார்கள். அதன் பின்னர் அன்னார் ஜாபிஹாவின் பக்கம் திரும்பினார்கள். அங்கு சென்று பார்த்தபோது ரோமானியர்கள் பெரிய படை சண்டை இடுவதற்குத் தயாராக இருந்தது. அப்போது ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்கு மேலும் படைகளை அனுப்புமாறு விண்ணப்பம் அனுப்பினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஈராக் திட்டத்தில் நியமிக்கப்பட்டிருந்த ஹஸ்ரத் காலித் பின் வலீது அவர்களிடம் நீங்கள் பாதி படையை ஹஸ்ரத் முஸன்அ அவர்களின் தலைமையின் கீழ் விட்டு விட்ட ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களின் உதவிக்காக செல்லுங்கள் எனக் கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். அதில் நான் காலித் அவர்களை அமீராக நியமிக்கிறேன். மேலும் நீங்கள் அவரை விட சிறந்தவரும் மேன்மையானவரும் ஆவீர் என்பதை நான் அறிவேன் என எழுதியிருந்தார்கள். இறை அடியார் அத்தீக் பின் அபூ கஹ்ஃபா அதாவது இது ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் உண்மையான பெயராகும். அபூ கஹ்ஃபா என்பது அவர்களது தந்தையின் பெயராகும். அந்தக் கடிதத்தில் எழுதப்பட்ட வரிகள் இவ்வாறாகும். அதாவது இறையடிவார் அத்தீக் பின் அபூ கஹ்ஃபாவின் கடிதம் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களின் பெயரில், உங்கள் மீது இறைவனது சாந்தி நிலவட்டுமாக! நான் சிரியா படையின் தலைமைப் பொறுப்பை காலித் அவர்களிடம் ஒப்படைத்துள்ளேன். நீங்கள் அவருடன் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள். செவிமடுங்கள்; கட்டுப்படுங்கள்; நான் உங்களை அவர் மீது கண்காணிப்பாளராக ஆக்குகின்றேன். நீங்கள் அவரை விட சிறந்தவர் ஆவீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் எனது சிந்தனையின்படி போர்க்கலையில் அதாவது போர் விஷயங்களில் உங்களை விட காலித் பின் வலீது அவர்களுக்கு அதிக திறமை உள்ளது. அல்லாஹ் என்னையும் உங்களையும் நேரான வழியில் நடத்துவானாக. இவ்வாறு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் எழுதி இருந்தார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீது அவர்கள் ஈராக்கின் ஹைரா என்ற நகரிலிருந்து ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதில் அல்லாஹ் உங்கள் மீது சாந்தியை ஏற்படுத்துவானாக. ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் சிரியாவின் பக்கம் செல்வதற்கு எனக்கு கட்டளையிட்டுள்ளார்கள். மேலும் படையின் தலைமைப் பொறுப்பையும் என்னிடம் ஒப்படைத்துள்ளார்கள். இறைவன் மீது ஆணையாக! நான் இதனை ஒருபோதும் வேண்டவில்லை; இது எனது விருப்பமாகவும் இருக்கவும் இல்லை; உங்களுக்கு முன்பிருந்த அதே அந்தஸ்தே இருக்கும். நாங்கள் உங்களுக்கு நன்றிகேடு காட்ட மாட்டோம். மேலும் உங்களை விட்டு விட்டு எந்த முடிவும் எடுக்க மாட்டோம். நீங்கள் முஸ்லிம்களின் தலைவர் ஆவீர்கள். உங்களது மேன்மையை நாங்கள் ஒருபோதும் மறக்க மாட்டோம். மேலும் உங்களது ஆலோசனையிலிருந்து தவிர்ந்திருக்கவும் மாட்டோம்.

(குலாம் பாரீ சைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் ஸித்தாரே தொகுதி 2 பக்கம் 19–21. பஷீர் சாஜிது உடைய அஷ்ரஹ் முபஷ்ஷிரஹ் பக்கம் 804. அல் பத்ர் பப்ளிகேஷன் உருது பாஸார் லாஹூர் 2000. சீருஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 457, 459 தாருல் இஷாஅத் பதிப்பு, கராச்சி. ஃபர்ஹங் ஸீரத் பக்கம் 110 ஸவார் அகாடமி பப்ளிகேஷன் கராச்சி 2003)

இதுதான் நம்பிக்கையாளரின் தன்மையாகும். எவ்வாறு இருபுறமும் பணிவான முறையில் கீழ்ப்படிதலுக்கான வெளிப்பாடு செய்யப்படுகிறது என்பதைப் பாருங்கள்.

பிறகு ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டு ஜமாத்தில் அவ்வல் மாதத்தில் அஜ்னாதைன் போர் நடைபெற்றது. இது பாலஸ்தீனின் சுற்று வட்டாரப் பகுதியிலுள்ள ஓர் ஊரின் பெயராகும். இவ்விடத்தில் ஒரு இலட்சம் ரோமானியப் படையுடன் முஸ்லிம்களுக்கு சண்டை நடைபெற்றது. அறிவிப்பில் வருகிறது. அஜ்னாதைன் போரில் ரோமானியப் படையின் தளபதியாக ரோமின் கைஸர் ஹர்கிலுடைய சகோதரன் தியோடுவர் இருந்தான். ஏறக்குறைய 35 ஆயிரம் முஸ்லிம்கள் ஒரு இலட்சம் எண்ணிக்கை கொண்ட படையை தோற்கடித்து அஜ்னாதைனை வெற்றி கொண்டார்கள். (பஷீர் சாஜிது உடைய அஷ்ரஹ் முபஷ்ஷிரஹ் பக்கம் 805. அல் பத்ர் பப்ளிகேஷன் உருது பாஸார் லாஹூர் 2000. முஃஜமுல் புல்தான் தொகுதி 1 பக்கம் 129 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத்) அஜ்னாதைனை வெற்றி கொண்ட பிறகு எதிரிகள் முஸ்லிம்களை முற்றுகையிட்டனர். இதன் விளக்கம் இவ்வாறு உள்ளது. அதாவது முஸ்லிம்கள் உலகின் பழமை வாய்ந்த நகரங்களில் ஒன்றாகிய டமாஸ்கஸ் அல்லது சிரியாவின் தலைநகரை 14 ஆம் ஹிஜ்ரியில் முஹர்ரம் மாதத்தில் முற்றுகையிட்டனர். இந்த முற்றுகை ஆறு மாதங்கள் வரை தொடர்ந்தது.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நம்பிக்கை
கொண்டவர்களை விட்டு விட்டு, நிராகரிப்பாளர்களை
(உங்களுடைய) நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள்
உங்களுக்கு எதிராக மிகத் தெளிவான குற்றச்சாட்டி(னைச்
சுமத்துவத)ற்குரிய வாய்ப்பை இறைவனுக்குக்
கொடுக்க விரும்புகின்றீர்களா? (4:145)

M. SABAHUL ISLAM & A. MOHAIDEEN ALI
Melapalayam

மறுபுறம் இருந்த படையினர் கோட்டையை அடைத்து விட்டனர். அதாவது தனது கோட்டையை அடைத்து விட்டு தனது பகுதியிலேயே இருந்தனர். இதனால் முஸ்லிம்களின் ஐந்து தளபதிகளும் தனது படைகளுடன் அந்த நகரத்தை முற்றுகை இட்டனர். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் தனது படையுடன் கிழக்குப்பக்க வாசலில் இருந்தார்கள். ஹஸ்ரத் காலிது பின் வலீது அவர்கள் அவர்களுக்கு நேர் எதிர்ப்புறமாகிய மேற்குப் பக்க வாசலில் இருந்தார்கள். ஏனைய மூன்று தளபதிகளும் பல்வேறு வாசல்களில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ரோமானியர்கள் அவ்வப்போது வெளியே வந்து போரிட்டனர். ஆனால் திரும்பிச் சென்று கோட்டையின் கதவை அடைத்துக் கொண்டனர். அவர்கள் கைஸர், ரோம் படைகளை அனுப்புவார் என நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் இஸ்லாமியப் படைகளின் தாக்குதல் அவர்களின் நம்பிக்கையை மண்ணோடு மண்ணாக்கியது. ஓர் இரவு அந்த நகரில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. கோட்டையின் காவலர்களும் அந்த திருவிழா மகிழ்ச்சியில் காவல் பணியில் கவனமற்று இருந்தனர். ஹஸ்ரத் காலித் பின் வலீது அவர்கள் தனது சில தோழர்களுடன் நகரின் சுவரைக் கடந்து நகரில் நுழைந்தார்கள். பிறகு கதவையும் திறந்தார்கள். இவ்வாறு அவர்களது படை நகருக்குள் நுழைந்தது. இதனைக் கண்ட நகர மக்கள் நகரின் மறுபுறம் இருந்த ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களிடம் சமாதானம் செய்து கொண்டார்கள். ஆனால் காலித் பின் வலீது அவர்களுக்கு இந்த செய்தி தெரியாமல் இருந்தது. அவர்கள் தொடர்ந்து போர் செய்து கொண்டிருந்தார்கள். மக்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களிடம் சென்று எங்களை காலித் இடமிருந்து காப்பாற்றுங்கள் என்று கோரினர். நகரின் மத்தியில் இரண்டு தலைவர்களின் சந்திப்பு நேருக்கு நேர் ஏற்பட்டது. காலித் பின் வலீது அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களை சந்தித்தார்கள். பிறகு ஏற்கனவே சமாதானம் செய்திருந்ததால் காலித் பின் வலீதும் மக்களுடன் சமாதானம் செய்து கொண்டார்கள். (பஷீர் சாஜிது உடைய அஷ்ரஹ் முபஷ்ஷிரஹ் பக்கம் 805–806. அல் பத்ர் பப்ளிகேஷன் உருது பாஸார் லாஹூர் 2000)

அடுத்து பெஹல் போர் நடைபெற்றது. ஃபெஹல் சிரியாவின் ஒரு நகரமாகும். டமாஸ்கஸ் வெற்றி கொண்ட பிறகு முஸ்லிம்கள் முன்னே சென்றபோது ரோமானியர்கள் பேஸான் என்ற இடத்தில் ஒன்று கூடி முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர் என்பது தெரிய வந்தது. முஸ்லிம்கள் அவர்களுக்கு எதிராக பெஹல் என்ற இடத்தில் கூடாரங்களை அமைத்தனர். ரோமானியப் படையின் தளபதி சமாதானம் செய்வதற்காக தனது தூதுவரை ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களிடம் அனுப்பினார். அவர் முஸ்லிம் படையில் சென்று பார்த்தபோது அங்கு அனைவரும் ஒன்றுபோல் அதாவது மேலதிகாரியும், பணியாளரும், தளபதியும், வீரர்களும் ஒன்றாக அமர்ந்திருந்தனர். எவ்வித வேறுபாடும், வித்தியாசமும் அவர்களிடம் தென்படவில்லை. கடைசியில் நிர்பந்தத்திற்கு ஆளாகி ஒருவரிடம் உங்கள் தளபதி யார் எனக் கேட்டார். மக்கள் தரையில் அமர்ந்திருந்த சாதாரண ஒரு மனிதனின் பக்கம் சைகை காட்டினர். அந்தத் தூதுவர் அருகில் சென்று நீங்களா இந்தப் படையின் தளபதி எனக் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் ஆம் எனக் கூறினார்கள். அந்த தூதுவர் அன்னாரிடம் நீங்கள் உங்களது படையைத் திருப்பி அழைத்துக் கொண்டு சென்று விடுங்கள். இதற்குப் பகரமாக உங்களது ஒவ்வொரு படைவீரருக்கும் இரண்டு தங்க அஷ்ரபிக்களும், தளபதிக்கு ஓராயிரம் தீனாரும், உங்களது கலீஃபாவுக்கு இரண்டாயிரம் தீனாரும் கொடுக்கிறோம் என்றார். ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் அதனை மறுத்து விட்டார்கள். மேலும் நாங்கள் பணம் பெறுவதற்காக வரவில்லை. செல்வத்தைப் பெறும் நோக்கிலும் வரவில்லை. நாங்கள் அல்லாஹ்வின் கலிமாவை உயர்த்துவதற்காகக் கிளம்பியுள்ளோம் என்றார்கள். அந்தத் தூதுவர் அவர்களை மிரட்டியவாறு அங்கிருந்து சென்று விட்டார். அவரது இந்தச் செயலைக் கண்ட பின்னர் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் படையை ஆயத்தம் செய்யக் கட்டளையிட்டார்கள். மறுநாள் காலை இருவருக்கும் இடையில் போர் நடைபெற்றது. ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் சுயமே படையின் நடுவில் நின்றார்கள். மிகவும் ஞானத்துடன் படையை சண்டையிடச் செய்து கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் முஸ்லிம்கள் குறைவான எண்ணிக்கையில் இருந்தபோதும் ரோமானியர்களை வீழ்த்தினார்கள். இதன் விளைவாக உறுதனின் அனைத்துப் பகுதிகளும் முஸ்லிம்களிடம் வந்து விட்டன. (பஷீர் சாஜிது உடைய அஷ்ரஹ் முபஷ்ஷிரஹ் பக்கம் 807–808. அல் பத்ர் பப்ளிகேஷன் உருது பாஸார் லாஹூர் 2000. ஷாஹ் முஅய்னுத்தீன் நத்வீயுடைய சீருஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 128 தாருல் இஷாஅத் உருது பாஸார் கராச்சி, பாகிஸ்தான்)

ஃபெஹல் வெற்றிக்குப் பின்னர் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் சிரியாவின் பிரசித்தி பெற்ற, போர் மற்றும் அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த நகரமான ஹிம்ஸின் பக்கம் முன்னேறினார்கள். வழியில் டமாஸ்கஸிலிருந்து மூன்று இரவு பயணத் தொலைவில் இருந்த லெபனானின் பழைய நகரமான பால்பக் நகரைக் கடந்தார்கள். மேலும் பால்பக் சிலை வணக்கத்தின் மிகப்பெரிய தலைமையிடமாக இருந்தது. அங்கிருந்த மக்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்களுடன் போரிடுவதற்குப் பகரமாக ஜிஸ்யாவின் நிபந்தனையுடன் சமாதானம் செய்து கொண்டனர். அதன் பின்னர் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் அவர்களுடன் போரிடவில்லை. ஜிஸ்யா கொடுத்து ஐயமின்றி நீங்கள் உங்கள் மார்க்கத்தில் இருங்கள் என்றார்கள். பிறகு ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் ஹுமுஸின் பக்கம் திரும்பினார்கள். அவர்களை முற்றுகையிட்டார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீதும் அன்னாருடன் இருந்தார்கள். நகரவாசிகள் கைஸரின் உதவியை நம்பினார்கள். அதனால் அவர்கள் போரிட ஆயத்தமானார்கள். ஆனால் அவர்கள் உதவியிலிருந்து அவநம்பிக்கை அடைந்தபோது அவர்கள் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு சமாதானம் செய்வதற்கு வேண்டினர். அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. சமாதானத்துடன் அவர்களது உயிர், செல்வம் ஆகியவற்றிற்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டது. அவர்களது வணக்கஸ்தலங்களும், வீடுகளும் பாதுகாக்கப்பட்டது. மேலும் யார் தனது மார்க்கத்தில் நிலைபெற விரும்புகிறாரோ அவர் ஜிஸ்யா மற்றும் நிலவரியைச் செலுத்த வேண்டும். அதாவது அப்படிப்பட்டவர் சந்தேகமின்றி தனது மார்க்கத்தில் இருக்கலாம். ஆனால் அவர் மீது விதிக்கப்படும் ஜிஸ்யா மற்றும் நிலவரியை அவர் செலுத்த வேண்டும்.

லாஸ்க்கியா வெற்றி – இதன் பின்னர் இஸ்லாமியப் படை கடற்கரைப் பகுதியில் அமைத்துள்ள ஹிம்ஸின் சுற்று வட்டாரப் பகுதியாகக் கருதக்கூடிய சிரியாவின் ஒரு நகரமான லாஸிக்கியாவை முற்றுகையிட்டது. பாதுகாப்பு அம்சம் தொடர்பான விஷயத்தில் லாஸிக்கியா மிகவும் ஒருங்கிணைந்திருந்தது. நரக மக்களிடம் உணவுப் பொருட்களின் குவியல் அதிகமாக இருந்தது. ஆகையால் அவர்கள் முற்றுகையை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் வெற்றி பெறுவதற்கு புதிய திட்டம் ஒன்றைத் தீட்டினார்கள். அன்னார் ஒருநாள் இரவு கோட்டையைச் சுற்றியுள்ள மைதானத்தில் பல பள்ளம் தோண்டச் செய்தார்கள். அதன் மீது புற்களை விட்டு மூடி விட்டார்கள். காலையில் முற்றுகையினர் எழுந்து ஹிம்ஸின் பக்கம் பயணித்தனர். அதாவது முழு படையும் இரவில் பள்ளம் தோண்டி அதில் புற்களையிட்டு மறைத்த பின்னர் நாங்கள் எங்கள் முற்றுகையிலிருந்து விலகிக் கொண்டோம்; நாங்கள் திரும்பிச் செல்கின்றோம் என்பது போன்று செய்தார்கள். நகரவாசிகள் நகரிலுள்ள படைகள் முற்றுகையினை எடுப்பதைக் கண்டு மகிழ்ந்தனர். பிறகு நிம்மதியாக நகரின் வாசலைத் திறந்தார்கள். மறுபுறம் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் இரவோடு இரவாக தனது படையுடன் அந்த இடத்திற்குத் திரும்பி வந்தார்கள். இரவே திரும்பி வந்த அந்தக் குகை போன்று அமைத்து வைத்த அல்லது சுரங்கம் போன்று ஏற்படுத்தி வைத்த அல்லது வடிகால் போன்று உருவாக்கி இருந்த அதில் ஒழிந்து கொண்டார்கள். காலையின் நகரின் வாசல் திறந்தபோது அன்னார் திடீரென்று தாக்குதல் நடத்தினார்கள். நகருக்குள் நுழைந்து நகரை வெற்றி கொண்டார்கள். (ஷாஹ் முஅய்னுத்தீன் நத்வீயுடைய சீருஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 128. தாருல் இஷாஅத் உருது பாஸார் கராச்சி, பாகிஸ்தான். பஷீர் சாஜிது உடைய அஷ்ரஹ் முபஷ்ஷிரஹ் பக்கம் 809. அல் பத்ர் பப்ளிகேஷன் உருது பாஸார் லாஹூர் 2000. முஃஜமுல் புல்தான் தொகுதி 5 பக்கம் 129 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத்)

*(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்...)*

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் அயர்லாந்து சுற்றுப் பயணம் 28 செப்டம்பர் 2014

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

தர்பிய்யத் செயலர் ஜுமுஆ குத்பா தொடர்பாக 80 சதவிகிதம் மக்கள் தொடர்ந்து முறையாகக் குத்பா கேட்கிறார்கள் எனக் கூறினார். அதற்கு ஹுஸூர் அவர்கள் மாதத்தில் நான்கு குத்பாவைக் கேட்கக்கூடிய மக்களின் எண்ணிக்கை தொடர்பாக அல்லது மூன்று அல்லது இரண்டு குத்பாவைக் கேட்கின்றவர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல் உங்களிடம் இருக்க வேண்டும். அதேபோன்று திருக்குர்ஆன் ஓதக்கூடியவர்களின் எண்ணிக்கையையும் ஆய்வு செய்வதற்கு முயற்சி செய்யுங்கள். ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு முறையாக தொடர்ந்து திருக்குர்ஆன் தர்ஸ் கொடுக்க வேண்டும். அதேபோன்று மக்ரிப் அல்லது இஷா தொழுகைக்குப் பிறகு ஹதீஸ் அல்லது மல்ஃபூஸாத்தின் தர்ஸ் கொடுக்க வேண்டும். திருமணத்திற்கு முன்பு ஆண் பெண் இருவருக்கும் கவுன்ஸிலிங் நடத்த வேண்டும். ஆண் பெண் இருவரும் அவர்களுடைய உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக அறிந்திருக்க வேண்டும். இரண்டு முபல்லிக்மார்களும் கவுன்ஸிலிங் கமிட்டியின் உறுப்பினர்கள் ஆவார்கள். இரண்டு முபல்லிக்மார்களில் ஒருவராவது கவுன்ஸிலிங் நடக்கும்போது இருப்பது அவசியமாகும். நாட்டில் நடக்கின்ற திருமணங்களில் கண்டிப்பாக கவுன்ஸிலிங் கொடுக்க வேண்டும். கவுன்ஸிலிங்கில் திருக்குர்ஆனில் கூறப்பட்ட உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பாக எடுத்துக் கூறுங்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நடைமுறை மற்றும் ஹதீஸின் ஒளியில் திருமணம் தொடர்பாக எடுத்துக் கூறுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் திருமணம் தொடர்பாக வழங்கிய போதனைகளை அன்னாருடைய வழிகாட்டலின் ஒளியில் எடுத்துக் கூறுங்கள். நிக்காஹ் குத்பா கொடுக்கும்போது வழக்கமாக ஓதக்கூடிய திருக்குர்ஆன் வசனங்களின் மொழியாக்கத்தைக் கூறுங்கள். அதன் மூலம் மக்கள் திருக்குர்ஆனுடைய போதனைகள் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக அறிந்து கொள்வார்கள் என்ற வழிகாட்டலை வழங்கினார்கள்.

செயற்குழு உறுப்பினர் ஒருவர் எங்கள் முரப்பி சாஹிப் அவர்களுக்கும் தற்போது திருமணம் நடக்க உள்ளது எனக் கூறினார். அதற்கு ஹுஸூர் அவர்கள் ஒரு முரப்பியின் மனைவி முரப்பியைப் போன்றே தியாகங்கள் செய்யக் கூடியவளாக இருக்க வேண்டும். மேலும் அர்ப்பணிப்பை நடைமுறைப்படுத்துவதில் உறுதியான தன்மை உடையவளாக இருக்க வேண்டும் எனக் கூறினார்கள்.

தேசிய தப்லீக் செயலர் தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பித்தவாறு நாங்கள் இரண்டு இலட்சம் Leaflets விநியோகம் செய்துள்ளோம் எனக் கூறினார். அதற்கு ஹுஸூர் அவர்கள் எல்லாவற்றுக்கும் முதலாவதாக அமைதி தொடர்பான பிரசுரத்தை கொடுங்கள். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அமைதி தொடர்பாக வழங்கிய தூதுச் செய்தியின் மேற்கோள் இருக்க வேண்டும். பிறகு இரண்டாவது பிரசுரம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகை தொடர்பாக Message of The Age என்ற தலைப்பில் விநியோகம் செய்யுங்கள். அதன் பிறகு இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் அடங்கிய பிரசுரங்கள் தயார் செய்யுங்கள். அதில் உலகின் வாழ்வு இந்த போதனைகளின் படி செயல்படுவதன் விளைவாகவே கிடைக்கும் என்பதை குறிப்பிடுங்கள் என்று கூறினார்கள்.

மேலும் ஹுஸூர் அவர்கள் இங்கு பள்ளிவாயில் ஒலி அமைக்கும் பணிக்காக ஒரு எலக்ட்ரீஸியன் வந்திருந்தார். அவர் மிகவும் தாக்கத்திற்குள்ளாகி இருந்தார். மேலும் எனக்கு இறைவன் கிடைத்து விட்டான் என்பதை வெளிப்படுத்தினார். நம்முடன் தொழவும் செய்தார். ஆக இதுபோன்ற மக்களிடம் தொடர்பை ஏற்படுத்தி Follow up செய்யுங்கள். பாராளுமன்றத்தின் ஓர் உறுப்பினர் நான் ஏகதேசமாக மதம் மாறி விட்டேன் என்று கூறினார். நீங்கள் விதையைத் தூவுங்கள். தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்துங்கள் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் உங்களுடைய மஜ்லிஸே ஆமிலாவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 22 ஆகும். ஒவ்வோர் உறுப்பினரும் ஓர் உள்ளூர்வாசியுடன் தொடர்பு கொள்ளுங்கள். நான்கில் ஒரு பகுதி வெற்றி கிடைத்தாலும் 5 அல்லது 6 பைஅத்துகள் இந்த முதல் ஆண்டிலேயே கிடைத்து விடும். இதுபோன்றே திட்டமிட்டு செயல் வடிவில் விளைவை ஏற்படுத்தக்கூடிய நிகழ்ச்சிகளை மேற்கொள்ளுங்கள். மேலும் உங்களுடைய தனிப்பட்ட தொடர்புகள் மற்றும் அணுகுமுறைகளை அதிகரிப்பதன் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் இங்கு பள்ளிவாயில் திறப்பு விழாவின் போது RT ரேடியோ மற்றும் பத்திரிகைகள் கவரேஜ் செய்யப்பட்டது. அதன் மூலம் இலட்சக்கணக்கான மக்கள் வரை தூதுச் செய்தி சென்றடைந்தது. தற்போது உங்களுடைய பணி என்னவென்றால் இதிலிருந்து பயன் பெற்றவாறு இங்கு Break Through செய்யுங்கள் என்று கூறினார்கள். Leaflets விநியோகம் செய்வது தொடர்பாக இந்த மக்கள் அஹ்மதிய்யத் என்றால் என்ன? என்பதை அறிந்து கொள்வார்கள். அவர்களுக்கு நம்முடைய நிலைபாடு என்ன? நாம் எப்படிப்பட்ட முஸ்லிம்கள்? நம்முடைய தன்மை என்ன? என்பதை அவர்கள் அறியவில்லை; நாம் பிற முஸ்லிம்களைப் போன்று அல்ல; அவர்களை விட நாம் மாறுபட்டவர்கள் என்பதை அறிந்து கொள்வார்கள். நேரடியாக எந்தவோர் அறிமுகம் இல்லாமல் தப்லீக் செய்தால் உங்களுடைய பேச்சை அவர்கள் கேட்க மாட்டார்கள். ஜமாஅத்தைப் பற்றி நீங்கள் ஏற்கனவே அறிமுகம் செய்திருந்து பிறகு அம்மக்களை சந்தித்துத் தொடர்பு கொண்டு பேசினால் உங்களுடைய பேச்சை அவர்கள் கேட்பார்கள்.

நிறைய மக்கள் இங்கு இவ்வாறு கூறுகிறார்கள்: அதாவது அவர்களுக்கு இஸ்லாம் தொடர்பான சரியான புரிதல் இல்லை. நல்ல முறையில் அறிந்திருக்கவில்லை. ஆனால் தற்போது இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தி கிடைத்த பிறகு இஸ்லாம் தொடர்பான எங்களுடைய சிந்தனைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்ற கருத்தையும் வெளிப்படுத்துகிறார்கள். தற்போது உங்களுடைய பணி என்னவென்றால் தொடர்ச்சியாக அவர்களுடன் தொடர்பை மேற்கொண்டு Follow up செய்யுங்கள் என்று கூறினார்கள்.

தப்லீக் செயலர், முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் எங்களுக்கு அதிகமான பைஅத்தின் இலக்கை வழங்கியுள்ளார்கள். அதை எங்களால் பூர்த்தி செய்ய முடியவில்லை. அதற்காக நாங்கள் மிகவும் வெட்கப்படுகிறோம் எனக் கூறினார். அதற்கு ஹுஸூர்

அவர்கள் நீங்கள் ஏமாற்றம் அடைய வேண்டாம். மாறாக, உங்களுக்குள் என்ன குறை இருக்கின்றது? என்பதைப் பாருங்கள். அடுத்த முறை அந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய முயற்சி செய்யுங்கள் என்று கூறினார்கள். சில நாடுகளில் வருடாந்திர பட்ஜெட் முழுமை பெறுவதில்லை. அவ்வாறிருந்தும் அடுத்த வருடத்தில் தன் பட்ஜெட்டைக் குறைப்பதில்லை. மாறாக அதிகப்படுத்தியே சமர்ப்பிக்கின்றார்கள். இங்குள்ள இரண்டு முபல்லிக்மார்களும் இந்த வருடத்தில் தலா இரண்டு பைஅத்துகள் செய்துள்ளார்கள். அது அல்லாமல் அயர்லாந்தின் தேசிய மஜ்லிஸே ஆமிலா 6 குத்தாம், அன்ஸார் மற்றும் லஜ்னா தலா 5 பைஅத்துகள் செய்துள்ளார்கள். கால்வேயில் (தப்லீக்) களம் தயாராக உள்ளது. நீங்கள் தற்போது விதை விதைத்தது பணிபுரிய வேண்டும். சுவீடனில் 3 இலட்சம் Leaflets விநியோகம் செய்யப்பட்டுள்ளது. அது ஒரு சிறிய ஜமாஅத் தான். அதேபோன்று ஸ்பெயினிலும் கடந்த ஆண்டு யூ.கே -விலுள்ள ஜாமிஆ மாணவர்களை ஸ்பெயினுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்கள் இரண்டு மூன்று வாரங்களில் இரண்டே முக்கால் இலட்சம் Leaflets -ஐ விநியோகம் செய்துள்ளார்கள். கடந்த நாட்களில் ஜாமிஆவின் 8 மாணவர்கள் சுற்றுலாவிற்காக ஸ்பெயின் சென்றிருந்தார்கள். அவர்களும் அங்கு தங்கியிருந்த நாட்களில் 50 ஆயிரத்தையும் விட அதிகமான Leaflets -ஐ விநியோகம் செய்துள்ளார்கள். பிரசுரம் விநியோகிக்கும் பொதுமக்கள், அவர்களை உற்சாகப்படுத்தினார்கள். Valencia -வில் இரயிலிலிருந்து இறங்கிய ஒரு பயணியிடம் பிரசுரம் கொடுக்கப்பட்ட போது அவர் நான் பார்சிலோனியாவிலிருந்து வருகின்றேன். அங்கு எனக்கு ஓர் இளைஞன் இந்தப் பிரசுரத்தைக் கொடுத்தார். அது என்னுடைய சட்டைப் பையில் இருக்கின்றது என்று கூறியவாறு அதை எடுத்துக் காண்பித்தார். அவர் அதை பாதுகாப்பாக வைத்திருந்தார். தூக்கி வீசவில்லை. 60 சதவிகிதத்தையும் விட அதிகமான மக்கள் பாதுகாப்பாக வைத்து அதை படித்தும் பார்க்கின்றார்கள். தற்போது அதிக எண்ணிக்கையில் மக்களுக்கு ஜமாஅத்தின் அறிமுகம் செய்யப்பட்டு வருகிறது என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

சத்ர் சாஹிப் மஸ்லிஸ் அன்ஸாருல்லாஹ் அவர்கள் தன்னுடைய பணியின் நிமித்தமாக ஒரு பயணம் மேற்கொண்ட போது ஓர் இளைஞனுடன் தொடர்பு ஏற்பட்டு மார்க்கம் தொடர்பான பேச்சு வந்ததும் அவர் எனக்கு அஹ்மதிகள் சார்பாக ஒரு Leaflets கிடைத்தது. நான் அதை முழுவதும் படித்து விட்டேன் எனக் கூறினார். எனவே அவருக்கு ஜமாஅத் தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டது. இவ்வாறாக அவருடன் ஒரு தொடர்பு ஏற்பட்டு விட்டது. அவரை பள்ளிவாசலுக்கு அழைத்து வந்தேன். அதற்கு ஹுஸூர் அவர்கள் அந்த நபருக்கு இன்னும் அதிகமான புத்தகங்களைக் கொடுங்கள். 'இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம்', 'முஹம்மது நபி (ஸல்) வாழ்க்கை வரலாறு' ஆகிய புத்தகங்கள் கொடுக்கவும் எனக் கூறினார்கள். நீங்கள் இரயில் நிலையம், பேருந்து நிலையம் ஆகிய இடங்களுக்குச் சென்று பிரசுரம் விநியோகிக்கவும். நீங்கள் ஓரிரு இடத்தில் நின்று விடக் கூடாது. மாறாக வழிமுறைகளை விரிவுபடுத்த வேண்டும். அதிகமான எண்ணிக்கையில் பிரசுரங்களை விநியோகம் செய்யுங்கள். மார்க்கெட்டில் நின்று கொண்டு பிரசுரம் விநியோகம் செய்யுங்கள். நீங்கள் மக்களின் கைகளில் தானே பிரசுரம் கொடுப்பீர்கள். Door to Door என்பதன் பொருள் ஒவ்வொரு வீடு வரை எட்ட வேண்டும் என்பதாகும் என்று ஹுஸூர் அவர்கள் வழிகாட்டல் வழங்கினார்கள்.

**- தமிழாக்கம் : மவ்லவி அபுல் ஹஸன் ஆபிது**

*(தொடர்ச்சி அடுத்த இதழில்....)*

## நபிமொழிகள்

**ஹதீஸ் எண்: 833**

*ரஸூலே கரீம் (ஸல்) அவர்களிடம் இருந்து கேட்டதாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தொழுகையில் தஜ்ஜாலின் குழப்பத்தில் இருந்து பாதுகாப்புத் தேடுகின்றேன் என்று துஆ செய்தார்கள்.*

*(சஹீஹ் புகாரி தொகுதி 2 கிதாபுல் அஸான் காதியான் பதிப்பு)*

**ஹதீஸ் எண்: 834**

اَللّٰهُمَّ اِنِّیْ ظَلَمْتُ نَفْسِیْ ظُلْمًا كَثِیْرًا وَّلَا
یَغْفِرُ الذُّنُوْبَ اِلَّا اَنْتَ فَاغْفِرْلِیْ مَغْفِرَةً مِّنْ
عِنْدِكَ وَارْحَمْنِیْ اِنَّكَ اَنْتَ الْغَفُوْرُ الرَّحِیْمُ

*அல்லாஹ்வே! நான் என் ஆன்மாவிற்கு அதிக அநீதியிழைத்து விட்டேன். உன்னைத் தவிர பாவங்களை மன்னிப்பவர் எவரும் இல்லை. எனவே என்னை மன்னிப்பாயாக. மேலும் என் மீது கருணை காட்டுவாயாக. நிச்சயமாக நீயே மன்னிப்பவனும், கருணை காட்டுபவனுமாவாய்.*

*(புகாரி தொகுதி 2 கிதாபுல் அஸான்)*

**ஹதீஸ் எண்: 868**

*ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீகதாதா அன்ஸாரீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் தொழுகைக்காக நிற்கும்போது அதை மிக நீண்டதாக எண்ணுகிறேன். அதற்குள் குழந்தையின் அழுகுரலைக் கேட்கிறேன். அப்போது நான் எனது தொழுகையை சுருக்கிக் கொள்கிறேன். ஏனெனில் அதன் தாய்க்கு துன்பம் கொடுக்க நான் விரும்பவில்லை.*

*(சஹீஹ் புகாரி தொகுதி 2 கிதாபுல் அஸான் காதியான் பதிப்பு )*

*(குத்பா தொடர்ச்சி...)*

எஞ்சியுள்ளவைகளை பின்னர் எடுத்துரைப்பேன் – இன்ஷா அல்லாஹ். இவர்களது குறிப்பும் தொடரும்.

இன்றைய நாட்களில் பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காக அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களை மவ்லவிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் தீமைகளிலிருந்து பாதுகாப்பானாக. அங்கு எதிர்ப்பின் கடுமையான அலைகள் எழுந்ததுள்ளது. சட்டத்தைப் பாதுகாக்கக் கூடியவர்கள் நீதியினை அறியவில்லை என்பது மட்டுமல்லாது அதனை சீரழித்தும் கொண்டிருக்கின்றனர். மவ்லவிகள் என்ன கூறுகின்றார்களோ அதன் பின்னே செல்கின்றனர். எனது கருத்தின்படி இது ஒருவேளை அவர்களது உயிர் காப்பாற்றப்படுவதற்காக அல்லது நிலையான அரசியல் அவர்களுக்கு இவ்வாறு கிடைத்து விடும் என்பதற்காகச் செய்கின்றனர். ஆனால் இது அவர்களின் தவறாகும். இதுவே இவர்களின் அழிவுக்குக் காரணமாக அமையும் என்பதை இவர்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நாங்கள் முன்பும் இந்தக் கஷ்டங்களைக் கடந்து வந்துள்ளோம்; தற்போதும் அல்லாஹ்வின் உதவியினால் கடந்து விடுவோம் – இன்ஷா அல்லாஹ். ஆனால், இவர்கள் இந்த செயல்பாடுகளிலிருந்து தவிர்ந்திருக்கவில்லை என்றால், அவர்களது அழிவு நிச்சயமானதாகும்.

ஆக, அஹ்மதிகள் இன்றைய நாட்களில் அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் இந்தக் கஷ்டங்களை அகற்றுவானாக. அல்லாஹ்வுடன் தனது தொடர்பை அதிகப்படுத்துங்கள். குறிப்பாக பாகிஸ்தானில் உள்ள மக்கள், பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள அஹ்மதிகள் அல்லாஹ்வுடன் தனது தொடர்பை அதிகப்படுத்துங்கள். இதன் மூலம் அல்லாஹ்வின் உதவியும், ஆதரவும் விரைவில் கிடைக்க வேண்டும். அங்கு வசிக்கும் அஹ்மதிகள் அந்தக் கஷ்டங்களிலிருந்து விடுதலை பெற வேண்டும்.

**- தமிழாக்கம் : மவ்லவி N. ஸியாவுல் ஹக்**

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 5 November 2020 Issue No. 45

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஆகுமானவற்றில் இறைவனிடத்தில் மிகவும் அதிக வெறுக்கத்தக்கது தலாக் ஆகும்.

## மக்கள் தனது நண்பர்களின் கோபத்தையும், சமுதாயத்தின் கோபத்தையும் கவனத்தில் கொள்ளும்போது, இறைவனின் கோபத்தை மட்டும்தானா பொருட்படுத்தாமல் இருக்க வேண்டும்.

சய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: إِنَّ أَبْغَضَ الْحَلَالِ عِنْدَ اللهِ الطَّلَاقُ அதாவது ஆகுமானவற்றில் இறைவனிடம் மிகவும் அதிக வெறுக்கத்தக்கது தலாக் ஆகும். ஆகுமானவற்றில் மிகவும் வெறுக்கத்தக்கது தலாக் ஆக இருக்கும்போது எவருடைய உள்ளத்தில் அல்லாஹ்வின் அன்பு இருக்குமோ அவர் அதன் அருகில் எவ்வாறு செல்ல முடியும்? இது அல்லாஹ்வுக்கு மிகவும் வெறுக்கத்தக்கதது என அவர் புரிந்து வைத்துள்ளார். ஆகுமான எல்லா வேலைகளையும் கண்டிப்பாக செய்துதான் ஆக வேண்டுமென்பது கட்டாயமில்லை. பனாரஸ், கொல்கத்தா, சென்னை அல்லது மும்பை ஆகிய இடங்களுக்குச் செல்வது ஆகுமானதாகும் என்பதை ஒவ்வொருவரும் அறிவார். ஆனால் இந்த இடங்களுக்குச் சென்றவர் எத்தனை பேர் இருக்கின்றனர்? ஹலால் என்பதன் பொருள் அதை கண்டிப்பாக செய்தே ஆக வேண்டும் என்றிருந்தால் இதன் பொருள், எவர்களுக்கு இந்த நகரங்களுக்குச் செல்ல பணம் இல்லையோ அவர்கள் தமது சொத்துக்களை விற்று ஹலாலான அந்த வேலையைக் கண்டிப்பாக செய்ய வேண்டும். ஆனால் மக்கள் அவ்வாறு செய்யாததிலிருந்து, இவை ஹலால் என்றாலும் அவற்றின்படி செயல்படுவது கண்டிப்பானது கிடையாது என்பதை அவர்கள் புரிகின்றார்கள் என்பதைக் குறிப்பிடுகிறது. மாறாக, பொருத்தமான சந்தர்ப்பத்தையும், சூழ்நிலையையும் கவனத்தில் கொள்வது அவசியமாகும். ஹலாலான ஒரு வேலையைச் செய்வதால் விருப்பமின்மை ஏற்படுகிறதென்றால் எந்நிலையிலும் அந்த வேலையிலிருந்து விலக வேண்டும். உதாரணமாக, வெங்காயம் சாப்பிடுவது ஹலால் ஆகும். ஆனால் வெங்காயத்தை சாப்பிட்டு விட்டு பள்ளிவாயிலுக்குச் செல்வது தடுக்கப்பட்டது. ஏனெனில் அங்கு மக்களுக்கு அந்த நாற்றத்தால் துன்பம் ஏற்படுகிறது. அவ்வாறே மனிதன் பச்சை நிற ஆடை அணிவது அல்லது நீல நிற ஆடை வணிவது அல்லது மஞ்சள் ஆடை அணிவது ஆகுமானதாகும். ஆனால் ஒருவருடைய நண்பன் மஞ்சள் நிற ஆடையை வாங்குங்கள் எனக் கூறும்போது அவர் எனக்கு மஞ்சள் நிறம் பிடிக்காது எனக் கூறுகிறார். ஏனெனில் அவரது பார்வையில் அவருடைய விருப்பத்திற்கேற்றவாறு இருக்கும் பொருளே அவருடைய இயல்புக்கு ஏற்றவாறு இருக்கும் பொருளே ஹலால் ஆகும்.

உணவைப் பொருத்தவரை ஹலாலானதை தூய்மையானதை உண்ணுங்கள் என்பது அல்லாஹ்வின் கட்டளையாகும். ஆனால் சிலர் கத்தரிக்காயைச் சாப்பிடுவதில்லை. சிலர் பூசணிக்காயை விரும்புவதில்லை. கத்தரிக்காயை நீங்கள் ஏன் சாப்பிடுவதில்லை என அவர்களிடம் கேட்டால் எங்களுக்கு விருப்பமில்லை எனக் கூறுகின்றனர். அல்லது மற்றவரிடம், நீங்கள் பூசணிக்காயை ஏன் சாப்பிடுவதில்லை எனக் கேட்கும்போது, எனது மனைவி அதை விரும்புவதில்லை எனக் கூறுகின்றனர். அவ்வாறே சிலர் வீடு கட்டும்போது தனது ஒரு விருப்பத்திற்கேற்ப இயல்புக்கேற்ப கட்டுகிறார்கள். சிலர் ஒரு மாடி வீடு கட்டுகின்றனர். சிலர் இரு மாடிக் கட்டடம் கட்டுகின்றனர். சிலர் மூன்று மாடி கட்டுகின்றனர். சிலர் வீடு கட்டும்போது சிறு தோட்டத்தை உருவாக்குவதை விரும்புகின்றனர். சிலர் சிறு தோட்டமில்லாமல் விட்டு விடுகின்றனர். இப்போது இந்த எல்லா விஷயங்களும் ஹலால் ஆனவையாகும். ஆனால் அவர்கள் எல்லாவற்றையும் செயல்படுத்துவதில்லை. எல்லா ஹலாலான விஷயத்தையும செயல்படுத்துவது கட்டாயமில்லை என அவர் கருதுகிறார் என்பதே இதன் பொருளாகும்.

ஆனால் மனைவிக்கு தலாக் கொடுக்கும் விவகாரம் வரும் போது மனைவிக்கு தலாக் கொடுப்பது ஆகுமானது எனக் கூறியவாற புரியாமல் யோசிக்காமல் உடனே தலாக் கொடுக்கப்படுகிறது. ஆனால் ஹலாலான சிலவற்றை மனிதன் தனக்காக, சிலவற்றை தன் நண்பர்களுக்காக, சிலவற்றை சமூகத்திற்காகவும் எப்போதும் விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். உண்மையில் அத்தகைய சூழ்நிலையில் நம்பிக்கை கொண்டவர் இந்த ஹலாலை இறைவனுக்காக விட்டு விடும் நிலையில் இருக்கிறார். மேலும் எனது இறைவனுக்கு இந்த வேலை விருப்பமானதில்லை. எனது இறைவன் என் மீது கோபமில்லாமல் இருக்க வேண்டும் எனக் கருதுகிறார். எனவே தலாக்கை பொதுவானதாக்குவது நேர்வழி அல்ல. தலாக்கிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சி செய்வது நேர்வழியாகும். ஹலால் என்பதன் பொருள், விரும்பினால் செய்யலாம். இது சட்டப்படி தடுக்கப்பட்டதன்று. ஆயினும் மற்றவர்களின் சிந்தனைகளையும், மற்றவர்களின் உணர்வு -களையும், அனுதாபத்தையும், மற்றவர்களின் அன்பையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எந்த ஹலாலானவற்றின்படி செயல்படுவதால் மற்றவர்களின் சிந்தனைகள், மற்றவர்களின் உணர்வுகளின், மற்றவர்களின் அனுதாபம், மற்றவர்களின் அன்பு ஆகியவற்றிற்கு இரத்தம் சிந்தப்படுகிறதோ அது ஹலால் அல்ல. மாறாக, அது ஒரு வகையில் ஹலாலும் ஒரு வகையில் ஹராமும் ஆகும். மக்கள் தமது நண்பர்களின் கோபத்தையும், சமுதாயத்தின் கோபத்தையும் கவனத்தில் கொள்ளும்போது இறைவனின் கோபத்திலிருந்து மட்டும்தான் மனிதன் பொருட்படுத்தாமல் இருக்க வேண்டுமா? இறைவனின் கோபம் மட்டும்தான் மனிதன் கவனத்திற் கொள்ளாதிருக்க வேண்டுமா? உலக மற்றும் சிறிய அன்புக்கும் மக்கள் பயப்படுகிறார்கள். அவர் கோபப்படுவதற்கு வாய்ப்பளிப்ப -தில்லை. நம்பிக்கை கொண்ட ஒருவர் إِنَّ أَبْغَضَ الْحَلَالِ عِنْدَ اللهِ الطَّلَاقُ (ஹலாலான விஷயங்களிலேயே இறைவனுக்கு மிகவும் வெறுக்கத்தக்கது தலாக் ஆகும்) என்ற ஹதீஸைப் படித்த பிறகு அல்லது கேட்ட பிறகு அதற்கு எதிராக நடப்பதற்கு எவ்வாறு துணிவு கொள்வார்? அதற்கு எதிராக செயல்படுவார்? أَبْغَضَ الْحَلَالِ ஹலாலான விஷயங்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் வெறுக்கத்தக்கது தலாக் ஆகும். எனவே அதனை தவிருங்கள் என ஷரீஅத் கூறும்போது ஒவ்வொரு நம்பிக்கை கொண்டவரும் இந்த விஷயங்களில் குறைவை உருவாக்க முயற்சி செய் வேண்டும். கணவன் மனைவியின் தொடர்புகளை விரிவுபடுத்தும் நேரத்தில் மறந்து விடக் கூடாது.

*(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 519-520 காதியான் பதிப்பு 2010)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad